SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:8, Pages:56
MARCH-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மார்ச் 2024,
விலை ரூ.20/-



**திருமலையில்**
**திருமலையப்ப ஸ்வாமி**
**தெப்போத்ஸவம்**
**20-03-2024**
**முதல்**
**24-03-2024**
**வரை**





22-01-2024 அன்று அயோத்தியில் நடைபெற்ற பாலராமர் விக்ரக பிராண பிரதிஷ்டை விழாவில் பங்கு கொண்ட திருமலை திருப்பதி தேவஸ்தான பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள்



16-01-2024 அன்று திருப்பதியில் இராமச்சந்திர புஷ்கரணி அரங்கில் கோடி அனுமன் சாலிசா பாராயண யக்ஞத்தில் ஸ்வாமிக்கு நீராஜனம் பண்ணும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள்



21-01-2024 அன்று திருமலையில் நாதநீராஜன அரங்கில் 6வது கட்டமாக நடைபெற்ற ஸ்ரீமத் ராமாயண அயோத்தியா காண்டம் அகண்ட பாராயணம்





அயோத்தியில் 22-01-2024 அன்று நடைபெற்ற பாலராமர் விக்ரக பிராண பிரதிஷ்டை விழாவில் பக்தர்களுக்கு வழங்கிட திருமலையில் சேவா சதன்-1ல் ஸ்ரீவாரி பிரசாதமான 1 லட்சம் லட்டுகளை 19-01-2024 அன்று அயோத்திக்கு அனுப்பி வைத்த தி.தி.தே. இணைச் செயலாட்சித் தலைவர் திரு. வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், பிரதான மக்கள் தொடர்பு அலுவலர் டாக்டர்.டி.ரவி அவர்கள்



அயோத்தியில் 22-01-2024 அன்று நடைபெற்ற பாலராமர் விக்ரக பிராண பிரதிஷ்டையை முன்னிட்டு தி.தி.தே. அன்னமய்யா செயல்திட்டம் சார்பில் திருப்பதி அன்னமய்யா கலாமந்திரத்தில் நடைபெற்ற அன்னமய்யா அகண்ட சங்கீர்த்தன மகாயக்ஞம்



அயோத்தியில் 22-01-2024 அன்று நடைபெற்ற பாலராமர் விக்ரக பிராண பிரதிஷ்டையை முன்னிட்டு திருமலை தர்மகிரியில் அமைந்துள்ள வேதப் பள்ளியில் நடைபெற்ற வால்மீகி இராமாயண பாராயணம்



*தமுவாச ஹ்ருஷீகேச:*
*ப்ரஹஸந்நிவ ப$_4$ாரத ।*
*ஸேநயோருப$_4$யோர்மத்$_4$யே*
*விஷீத$_3$ந்தமித$_3$ம் வச: ॥*

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–10*

பரத குலத்தோன்றலே! திருதராஷ்டிரரே! அந்தர்யாமியான ஸ்ரீகிருஷ்ணன் இரண்டு படைகளுக்கும் நடுவில் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் அர்ஜுனனிடம் சிரித்தாற்போல வார்த்தைகளைக் கூறினார்.

*மாதா தேவி த்வமஸி பகவாந் வாஸுதேவ: பிதா மே*
*ஜாத: ஸோஹம் ஜநநி யுவயோரேகலக்ஷ்யம் தயாயா: ।*
*தத்தோ யுஷ்மத் பரிஜநதயா தேசிகைரப்யதஸ் த்வம்*
*கிம் தே பூய: ப்ரியமிதி கில ஸ்மேர வக்த்ரா விபாஸி ॥*



பிராட்டியே! நீ எனக்கு தாயாகின்றாய். கல்யாண குணங்கள் நிறைந்த எம்பெருமான் தந்தையாகின்றான். தாயே! குற்றங்களைக் கொண்ட அடியேன் உங்கள் இருவருடைய கருணைக்கும் முக்கியப் பாத்திரமாக ஆனேன். சிறந்த ஆசார்யர்களாலும் உங்கள் இருவருக்கும் அடிமையாக சமர்ப்பிக்கப்பட்டேன். ஆதலால் பின்னும் நீ விரும்புவது என்ன என்றன்றோ? திருமுகத்தில் புன்சிரிப்புக் கொண்டு நீ விளங்குகின்றாய்.

*-ஸ்ரீஸ்துதி 23*







**28-02-2024,** புதன் கிழமை
சேனாதிபதி உத்ஸவம்,
**29-02-2024,** வியாழக் கிழமை
காலை:துவஜாரோஹணம்
இரவு:பெரிய சேஷ வாகனம்
**01-03-2024,** வெள்ளிக் கிழமை
காலை:சிறிய சேஷவாகனம்
இரவு:ஹம்ஸ வாகனம்
**02-03-2024,** சனிக்கிழமை
காலை:சிம்ம வாகனம்
இரவு:முத்துப்பந்தல் வாகனம்
**03-03-2024,** ஞாயிற்றுக்கிழமை
காலை:கல்ப விருக்ஷ வாகனம்
இரவு:சர்வ பூபால வாகனம்
**04-03-2024,** திங்கட்கிழமை
காலை:மோகினி அவதாரம்
இரவு:கருட சேவை
**05-03-2024,** செவ்வாய்க்கிழமை
காலை:ஹனுமத் வாகனம்
மாலை:வஸந்தோத்ஸவம்
இரவு:யானை வாகனம்

**06-03-2024,** புதன் கிழமை
காலை:சூரியப்பிரபை வாகனம்
இரவு:சந்திரப்பிரபை வாகனம்
**07-03-2024,** வியாழக்கிழமை
காலை:திருத்தேர்
இரவு:குதிரை வாகனம்
**08-03-2024,** வெள்ளிக்கிழமை
அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம்
துவஜாவரோஹணம்









வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

மார்ச் 2024

மலர் 03 இதழ் 08


## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| மகாசிவராத்திரி | -திரு. பூமண கருணாகர ரெட்டி, திருப்பதி. | 07 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: வேங்கடவனைச் சொல்லாத நாவினால் என்ன பயன்? | -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 10 |
| வேதங்கள் காட்டும் கணிதம் | -டாக்டர் எம்.எல்.ராஜா, ஈரோடு. | 14 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: பொல்லாத மூக்குடைய சூர்ப்பணகை | - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 16 |
| பகவத்கீதையில் பெண்களின் மேன்மை | - திருமதி விஜயலக்ஷ்மி நடராஜன், சென்னை. | 19 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: விநாயகி | - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 22 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் | -திரு.எம்.எஸ்.சுகுமார், சென்னை. | 25 |
| திருமலையில் நடைபெற்ற தார்மீக மாநாட்டில் ஸ்வாமிகள் வழங்கிய அருளுரை தொகுப்புகள் மற்றும் தீர்மானங்கள் | - திரு. வ.ஓ.பரந்தாமன், சத்திரவாடா. | 31 |
| பங்குனி உத்திரத்தில் ஸ்ரீரெங்கநாயகித் தாயாரும் நம்பெருமாளும் | - திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி. | 41 |
| ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்... | - திரு. துளசி கிருஷ்ணா, சென்னை. | 44 |
| ராசிபலன்கள் : மார்ச் 2024 | -டாக்டர் எம்.வி.நரநாராயணன், சேலம். | 46 |
| நீதிக்கதை : தற்புகழ்ச்சி | -செல்வி இரா.அமிர்தவர்ஷினி, புதுச்சேரி. | 47 |
| சித்திரக்கதை : கர்வம் மேன்மை தராது | | 52 |


இந்த இதழில் திருமலையில் நடைபெற்ற தார்மீக மாநாட்டில் கலந்து கொண்ட சுவாமிகளின் அருளுரைகளும், தீர்மானங்களும் இடம் பெறுவதால் சில தொடர் கட்டுரைகள் வெளியிட இயலவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : திருமலையில் தெப்போத்ஸவ வைபவத் திருக்காட்சிகள்

பின்னட்டை : புண்டரீகவல்லித் தாயார், ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி


சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்



# மங்கையரால் வாழ்வு பெறும் மண்ணுலகம்

இவ்வுலகைப் படைத்து, இயக்கி, அழிப்பது பெண்மையே ஆகும். பெண் இல்லையேல் எதுவும் இல்லை என்றே கூறலாம். இதனை மெய்ப்பிக்கும் விதமாகவே புரட்சிக்கவி பாரதிதாசன் *"மங்கையராகப் பிறந்திடவே மா தவம் செய்திட வேண்டுமம்மா"* என்று போற்றுகின்றார். அத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்களுக்கு மங்கையர் தினம், அன்னையர் தினம் என்றெல்லாம் வருடத்தில் ஒரு சில நாட்களைக் குறிப்பிட்டுக் கொண்டாடுகின்ற வழக்கம் உலகெங்கிலும் உள்ளது. ஆனால், நமது பாரத தேசத்தைப் பொறுத்த வரையில், தாய்க்குலத்தினர் என்று சிறப்பித்துக் கூறப்படும் மங்கையர்களை நாம் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் கொண்டாடி மகிழ்கின்றோம்.

பாரத தேசத்து குடிமக்களைப் பண்படுத்தி நெறிப்படுத்துகின்ற ஆன்மீக மரபானது ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை ஞான சக்தி என்றும், ருக்மிணி தேவியைக் கிரியாசக்தி என்றும், ராதையை இச்சா சக்தி என்றும் குறிப்பிடுகின்றது. அவ்வாறே குமரக் கடவுளையும் ஞானசக்தியாகவும், தெய்வயானையைக் கிரியா சக்தியாகவும், வள்ளியை இச்சா சக்தியாகவும் குறிப்பிடுவது வழக்கம். அன்னை உமையவளுக்குத் தன்னுடைய திருமேனியின் இடப்பாகத்தினை அளித்த சிவபெருமானை "மாதொருபாகன்" என்று வழிபடும் நமது ஆன்மீக மரபு *"சக்தி இல்லையேல் சிவம் இல்லை"* என்று உரைக்கச் சொல்கின்றது. மகாலக்ஷ்மி தாயாரை, தன் திருமார்பில் தாங்கும் மாலவனை திருமால் என்றே நம் ஆன்மீக மரபு விளிக்கின்றது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "மாத்ருதேவோ பவ" என்பவை எல்லாம் நம்முடைய நாடி நரம்புகளில் ஊறிவிட்ட தொன்மங்களாகும். ஓர் இல்லத்தில் யார் வேண்டுமானாலும் விளக்கை ஏற்றி இருட்டை அகற்ற முடியும் என்ற பொழுதும், அவ்வீட்டிற்கு வாழ்க்கைப்பட்டு வந்த மருமகளையே "விளக்கேற்ற வந்தவள்" என்று நம் மரபு குறிப்பிடுகின்றது. குடும்பத் தலைவியை "கிருஹ லக்ஷ்மி" என்று அழைப்பதன் மூலம் ஒரு குடும்பத்தில் அனைத்து வளங்களுக்கும் ஆதாரமாக இருப்பது பெண் இனமே என்பதை நம் பாரம்பரியம் காலம் காலமாக உலகுக்கு எடுத்தோதி வருகின்றது.

இவ்வளவு ஏன் முற்றும் துறந்த முனிவர்கள் கூடத் தங்களைப் பெற்ற அன்னை எனும் உறவைக் கைவிட வேண்டியதில்லை என்பதற்கு ஆதிசங்கரரின் வரலாறே சாட்சியாக இருக்கின்றது. தாம் சன்னியாசியாக இருந்தாலும் கூட, அன்னையின் இறுதிக் காலத்தில் எங்கிருந்தாலும் ஓடோடி வருவதாக வாக்குக் கொடுத்தார். அவ்வாறே வந்திருந்து தம்முடைய தாயார் செய்த தியாகங்களை நினைத்து நெஞ்சுருகிப் பாடிய "மாத்ருபஞ்சகம்" என்னும் ஸ்தோத்திரத்தின் மூலம் ஆதிசங்கரர் தம்முடைய தாயாரை மட்டுமின்றி, ஒட்டுமொத்த தாய் குலத்தையும் கௌரவித்தார். பகவான் ரமணரும் தன் தாயை தம்முடைய ஆசிரமத்திலேயே தங்க வைத்து முக்தியுலகை நோக்கி வழியனுப்பி வைத்திருக்கின்றார்.

மகாகவி பாரதி கூற்றுப்படி பெண்ணாகப் பிறந்தவர்கள் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் கடந்த நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது என்றாலும், இந்நூற்றாண்டில் நம் பாரத தேசத்துப் பெண்கள் செல்லும் திசையெல்லாம் வெற்றிக் கொடி நாட்டி வருகின்றனர்.குடியரசுத் தலைவர், மத்திய மாநில அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், நீதித்துறை, இராணுவம், வங்கித் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் என எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அத்துறையில் பெண்களின் சாதனை முழக்கம் கேட்கின்றது. குறிப்பாக நம் நாட்டில் விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்களான சந்திரயான், ஆதித்யா போன்ற முன்னோடி திட்டங்களில் பங்குபெறும் மகளிர் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

உழைப்பு, உற்சாகம், தியாகம், விடாமுயற்சி, வெற்றி, சுபீக்ஷம், மகிழ்ச்சி ஆகிய அனைத்தின் இலக்கணங்களாகவும் இம்மண்ணில் உலாவரும் மகளிர் ஒவ்வொருவருக்கும் திருவேங்கடமுடையானின் திருவருள் கிடைத்திட இம்மகளிர் தினத்தில் நம் ஸப்தகிரி ஆன்மீக மாத இதழ் மிகவும் சிரத்தையுடன் வேண்டிக் கொள்கிறது.

இவ்வுலகினை வாழ்விக்கும் பெண்மையைப் போற்றுவோம்!!!



# மகா சிவராத்திரி

தெலுங்கு மூலம்
திரு. பூமண கருணாகர ரெட்டி,
தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர்,
திருப்பதி.

திருப்பதி ஒரு சிறப்புற்ற திருத்தலமாகும். எண்ணற்ற மகிமைகளுக்கு நிலையமாக விளங்குகின்றது.பாவங்களை அழிக்க வல்லது. இத்திருப்பதியைக் கலியுக வைகுந்தம் எனப் புராணங்களும் போற்றுகின்றன. இன்றைய காலத்தில் திருமலை எனும் பெயர் மலை மேல் உள்ள பகுதியையும், திருப்பதி எனும் பெயர் மலை அடிவாரத்தில் உள்ள திருப்பதி நகரத்தையும் குறிக்கின்றது. ஆனால் பண்டைய காலத்தில் மலை மேல் உள்ள பகுதியும், மலையடிவாரத்தில் உள்ள பகுதியையும் திருப்பதி திருத்தலமாகவே ஆன்றோர்கள் எண்ணினர்.

இத்திருப்பதி திருத்தலம் அரிஅரன் பேதத்தை உடையது. திருமலையின் அடிவாரத்தில் கபில தீர்த்த சரோவரத்தில் – ஸ்ரீகாமாக்ஷி தேவி உடனுறை ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருச்சன்னதி அமைந்து உள்ளது. இது திருமலையின் முதல் வழி. ஆதலால் தான் ஸ்ரீவேங்கடேஸ்வர சகஸ்ரநாமத்தில் **"உபத்யகா ப்ரதேஸஸ்த சங்கர த்யாத மூர்தயே நம:"** (திருமலையில் இருந்து இறங்கும் மலைத்தொடரில் வீற்றிருக்கும் சிவபெருமானை தியானிப்போம்) எனும் ஒரு நாமமும் துதிக்கப்படுகிறது. இங்கு நாம் அறிய வேண்டியது என்னவெனில் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில்

**பெரும்பாலும் சிவாலயங்களில் விஷ்ணுவும், விஷ்ணு ஆலயங்களில் சிவனும் க்ஷேத்திர பாலகர்களாகத் திகழ்வது நாம் அறிந்ததே ஆகும். ஸ்ரீவைஷ்ணவ ஆலயமான திருமலையின் க்ஷேத்திர பாலகர் ருத்ரராவார். திருமலையில் மகாசிவராத்திரி உத்ஸவம் க்ஷேத்திர பாலகர் உத்ஸவம் எனப் போற்றப்படுகிறது. க்ஷேத்திர பாலகரான ருத்திரர் திருமலை ஆலயத்தின் அக்னி திசையில் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கோகர்ப தீர்த்தக் கரையில் கொலுவீற்றிருக்கிறார். ஒவ்வொரு மகாசிவராத்திரி அன்றும், இந்த க்ஷேத்திர பாலகருக்கு அபிஷேகம் செய்வது சம்பிரதாயமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.**



## லக்ஷ்மி கடாக்ஷம் பெருக...



- விஷ்ணுவின் அம்சமாகத் திகழும் நெல்லி மரத்தில் மஹாலக்ஷ்மி வாசம் செய்வதால் லக்ஷ்மி கடாக்ஷம் பெருகி, எவ்வித தீய சக்திகளும் அணுக முடியாது.
- நாள்தோறும் துளசி மாடத்திற்கு விளக்கேற்றி மூன்று முறை வலம் வர வேண்டும்.
- வீடுகளில் காலை வேளைகளில் வேங்கடேச சுப்ரபாதமும், மாலை வேளைகளில் விஷ்ணு சஹஸ்ரநாமமும் ஒலித்தால் செல்வச் செழிப்பு தாமாகவே வந்து சேரும்.
- சண்டை சச்சரவுகள் இருக்கும் வீட்டில் லக்ஷ்மி இருக்கமாட்டாள். விளக்கேற்றும் வேளைகளில் அமங்கலமான சொற்களைத் தொலைக்காட்சி, ரேடியோக்களில் கேட்பது நன்மையைத் தராது.
- பசுக்களுக்குத் தீவனங்கள் கொடுப்பதால் அது கோபூஜை–குபேர பூஜை செய்வதற்கு சமம்.
- சங்கு, நெல்லிக்காய், பசுஞ்சாணம், கோஜலம், தாமரை மலர், சுத்தமான ஆடைகள் வீட்டில் இருப்பதும், காலையில் தனது உள்ளங்கைகளைப் பார்ப்பதும், கோயில் கோபுரம், இறைவனின் திருவுருவப் படத்தைப் பார்ப்பதும் லக்ஷ்மிகரமாகும். கோலம், சாம்பராணி போடும் வீட்டில் திருமகள் தங்குவாள். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் குத்துவிளக்கை ஏற்றி பூஜை செய்தல் வேண்டும். விளக்கேற்றிய பின் பால், தயிர், உப்பு, ஊசி இவற்றை பிறருக்குக் கொடுக்கக் கூடாது. வாசல் படியில் நின்று பணப் பரிவர்த்தனை செய்தல் கூடாது.

**- திரு. எம் அசோக்ராஜா, திருச்சி, 9750333265**

ஸ்ரீநிவாசன் வகுளமாதாவை ஆகாசராஜனிடம் தன் திருக்கல்யாணம் குறித்து பேசுவதற்காக செல்லும்படி கூறுகிறார். அப்பொழுது ஸ்ரீநிவாசன் வகுளமாதாவிடம், ஸ்ரீகாமாக்ஷி தம்பதியரின் அருளையும் ஸ்ரீநிவாசன் வேண்டினான் எனச் சொல்லும்படி கூறினார். வகுளமாதாவும் ஸ்ரீநிவாசன் கூறியபடி ஸ்ரீகாமாக்ஷி தம்பதியரை வணங்கிய பின்னர் ஆகாச ராஜன் அரசாளும் நாராயண வனத்திற்குச் சென்று ஸ்ரீநிவாசனின் திருக்கல்யாணத்திற்கு ஏற்பாடுகள் செய்தார். சிவன் ஞானத்தை வழங்குபவன். ஸ்ரீஹரி மோட்சத்தை அளிப்பவன். மோக்ஷத்தைப் பெற ஞானமே முதுகெலும்பாகத் திகழ்கிறது.

## சிவராத்திரியின் 5 வகைகள்



**1) நித்ய சிவராத்திரி :** தினமும் சிவ வழிபாட்டில் சங்கல்பித்தல், பூஜித்தல், இரவு சிவன் நினைவோடு உறங்குதல்.

**2) பக்ஷ சிவராத்திரி :** ஒவ்வொரு சுக்ல, கிருஷ்ண பக்ஷங்களில் வருகின்ற சதுர்தசி இரவு வேளையில் சிவ வழிபாட்டில் தியானித்தல், பூஜித்தல், இரவு சிவபெருமான் நினைவோடு உறங்குதல்.

**3) மாத சிவராத்திரி :** ஒவ்வொரு மாதமும் கிருஷ்ண பக்ஷத்தில் வருகின்ற சதுர்தசி இரவு வேளையில் சிவ வழிபாட்டில் சங்கல்பித்தல், பூஜித்தல், இரவு சிவனின் நினைவோடு உறங்குதல்.

**4) மகாசிவராத்திரி :** மாசி மாதம் பகுள சதுர்தசி அன்று புராணங்களில் கூறியுள்ளபடி சிவபூஜையைக் கடைபிடித்தல்.

**5) யோக சிவராத்திரி :** ஞானி தன் மனதினை சிவபெருமானில் நிலைநிறுத்தி, லௌகீகமான உலகினைப் புறக்கணித்து வாழ்தல். இவ்வாறாக சிவராத்திரிகளில் அவரவர் சிவபக்தியை மேற்கொண்டு மனித வாழ்வினை வாழ்தல் வேண்டும் என மகரிஷிகள் உபதேசித்து உள்ளனர்.





**சிவராத்திரி நாளில் துவாதச ஜோதிர்லிங்க திருத்தலங்களையோ அல்லது காசி, ஸ்ரீசைலம், ஸ்ரீகாளஹஸ்தி திருக்கோயில்களில் ஏதாவது ஒரு ஆலயத்தைத் தரிசித்தலும் காலம் காலமாக இந்தியர்களிடம் உள்ள வழக்கமாகும். நாம் நமது பரந்த இந்தியாவில் பல்வேறு விதமான சடங்குகள் செய்தும், உடையணிந்தும் மற்றும் மந்திரங்களை உச்சரித்து வாழ்ந்தாலும், இதுபோன்ற சிறப்புமிகு நாள்கள் நம்மிடையே ஒரு ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன.**

**சிவபெருமானின் விருப்பமான பொருள்களான ருத்ராட்சங்கள், பஸ்மம் மற்றும் பஞ்சபில்வங்களில் ஒன்றை (துளசி, விளாம், வில்வம், கருநொச்சி, நாயுருவி) அர்ச்சிப்பர். வில்வம் நறுமணமுடன் கூடிய ஆரோக்கியமானதாகும். மேலும், வில்வச்சாறு கஷாயம் வெப்பம், பித்தம், இரத்தப்போக்கு, ஆஸ்துமா மற்றும் நீரிழிவு ஆகியவற்றையும் போக்க வல்லது என்று பெரியோர் கூறுவர். புராணங்களும் சிவபூஜையின் மகிமைகளை விளக்கமாகக் கூறுகின்றன.**





மாசி மாதம் சதுர்தசியன்று நள்ளிரவை மகா சிவராத்திரியாகக் கொண்டாடுவர். லிங்கமகா புராணத்தில் மகாசிவராத்திரி விரதம் குறித்து கூறப்பட்டுள்ளது. ஸ்காந்த புராணத்தில் உள்ள பிரம்மோத்தர காண்டத்தில், லிங்கபுராணத்தில் சிவராத்திரியின் மகிமைகளைக் கூறும் கதைகள் உள்ளன. இதனை சிவராத்திரி விரதத்தை கடைபிடிக்கும் பக்தர்கள் பக்தியோடு துதிப்பர். சிவலிங்கம் உருவம் மற்றும் அருவமான பூஜைகளுக்கும் பொதுவானதாகும். சிவராத்திரியன்று சிவலிங்க வழிபாடே முதன்மையானதாகும். அன்றைய தினம் விரதம் இருந்து கண் விழித்து இரவு வேளையில் நான்கு யாமங்களிலும் சிவபிரானுக்கு அபிஷேகம் செய்து பூஜித்தால் பாவங்கள் யாவும் தொலைந்து போகும்.

சிவபிரானே படைப்பிற்கு மூலகாரணமாக விளங்குகின்றார். மாசி பகுள சதுர்தசி அன்று நள்ளிரவு வேளையில் சிவபெருமான் அக்னி லிங்கம் வடிவில் அவதரித்தார். எனவே அந்நாளையே சிவராத்திரியாக எண்ணினர். இந்த சிவராத்திரியை நித்ய, பக்ஷ, மாத, மகா, யோக சிவராத்திரி என ஐந்து வகையாக புராணங்கள் கூறுகின்றன.

இவற்றில் மகாசிவராத்திரியை இந்தியர்கள் வெவ்வேறு வழிகளில் சிவபெருமானை வழிபடுகின்றனர். மேலும் வாழ்நாளில் ஒரு முறையேனும் மனிதப் பிறவியை அளித்ததற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சிவராத்திரி விரதத்தை கடைபிடித்தல் வேண்டும் என்று எண்ணுதலே "ஜன்மத்திற்கு ஒரு சிவராத்திரி" ஆகும்.

சிவராத்திரியானது நித்திய கால ஓட்டத்தில் ஒரு சிறந்த நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்த மகா சிவராத்திரி நன்னாளில் நம் முன்னோர்கள் கடைபிடித்த சிவவழிபாட்டினை நாமும் தொடர்ந்து கடைபிடித்து பரமனின் இன்னருளைப் பெறுவோம்.

**தமிழாக்கம் : திரு. வ. ஓ. சுரேஷ், சத்திரவாடா.**

# வேங்கடவனைச் சொல்லாத நாவினால் என்ன பயன்?



– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

பகவான் நாட்டாரைத் திருத்த பல்வேறு அவதாரங்களை எடுத்தான். அவதாரங்களை எடுத்தது மட்டுமல்ல, கருணையோடு பல கலைகளையும் தந்தான்.

இதில் கலைகள் என்பது சாத்திரங்களையும், வேதங்களையும் குறிக்கும். ***"நற்கலைகள் ஒன்றும் அறிந்திலேன்"*** என்றும், ***"கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோ தான்"*** என்றும் ஆழ்வார்கள் பாடுகிறார்கள். இதிலே இருந்து கலைகள் சாத்திரங்கள் என்பது விளங்கும். மனிதனை திருத்திப் பணி கொள்ளவும், அவனுடைய ஆத்மாவை உஜ்ஜீவனம் செய்யவும், இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை வேதக்கலைகள்.

இதை ஆசாரிய இருதயம் முதல் சூத்திரம் மிக அற்புதமாகக் கூறும்.

"காருணிகனான சர்வேஸ்வரன், அறிவிலா மனுசர், உணர்வெனும் சுடர் விளக்கு ஏற்றி, பிறங்கிருள் நீங்கி, மேலிருந்த நந்தா விளக்கைக் கண்டு, நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு, மறையாய் விரிந்த, துளக்கமில் விளக்கில், கொளுத்தின, பிரதீபமான கலைகளை, நீர்மையினால் அருள் செய்தான்."



இதில் நல்லதும், கெட்டதும் தெரிந்து கொள்வது என்பது முக்கியம். உடம்புக்கு எது நல்லது கெட்டது என்பது அல்ல. இந்த உடம்பில் இருக்கக்கூடிய ஆத்மாவை உணர்ந்து, அந்த ஆத்மாவுக்கு எது நல்லது, கெட்டது என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம். அதற்குத்தான் சாத்திரங்கள்.

இந்தச் சாத்திரங்கள் அறியாத வரை, மெய் உணர்வு பிறப்பதில்லை. மெய் உணர்வு பிறக்காத வரை ஆத்ம ஸ்வரூபமும், ஈஸ்வர சொரூபமும் தெரிவதற்கு வழி இல்லை. இது தெரிந்து கொள்ளாத பொழுது இந்த மனிதப் பிறவி பெற்றும் பயனில்லை. இதைத்தான் திருமங்கையாழ்வார் தமது திருக்குறுந்தாண்டகத்தில்,

***வானிடைப் புயலை மாலை வரையிடைப் பிரசவம் ஈன்ற***
***தேனிடைக் கரும்பின் சாற்றை திருவினை மருவி வாழார்***
***மானிடப் பிறவி அந்தோ! மதிக்கிலர் கொள்க, தம்தம்***
***ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு உறுதியே***
***வேண்டினாரே.***

என்ற பாசுரத்தில், மனிதப் பிறவி பெற்றும் பயனில்லாமல் கழிக்கின்றார்களே என்று பாடுகின்றார்.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், ஒரு மனிதன் உஜ்ஜீவனம் பெறுவதற்கு கீழ் காணும் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்கின்றார்.

1) ஆழ்வார்கள் பாசுரங்களைப் பாட வேண்டும்.

2) இல்லாவிட்டால், அருளிச் செயலை யார் ஓது கின்றார்களோ அவர்களை ஆதரித்து, அவர்கள் ஓதுகின்ற ஆழ்வார்களின் பாசுரங்களைச் செவி குளிரக் கேட்க வேண்டும்.

3) அது இயலாவிட்டால், அதைப் பயின்று வாழும் மகான்களின் திருவடிவாரத்தைப் பணிய வேண்டும்.

4) இயலாவிட்டால், "உய்ய ஒரே வழி, உடையவர் திருவடி" என்று எதிராசரை எப்பொழுதும் நினைத்துக் கொள்ள வேண்டும்.

5) அதுவும் இயலாவிட்டால் திருவேங்கடத்தை தரிசிக்க வேண்டும். துதி செய்ய வேண்டும்.

6) அதுவும் இயலாவிட்டால் இருந்த இடத்தில் இருந்தாவது வேங்கடம் நோக்கி வணங்க வேண்டும்.

இப்படி எதுவுமே செய்யாவிட்டால், அந்த அலர்மேல் மங்கை மணாளன் கருணை (மலர்ப் பதம்) எப்படி இந்த ஆத்மாவுக்குக் கிடைக்கும்?

*பதின்மர் செந்தமிழைப் படிக்கிலாய்; கேளாய்*
*படித்த பேர் தாளையும் பணியாய்*
*எதிபதி சரணே சரணம் என்று ஒரு கால்*
*இசைக்கிலாய், எமது வேங்கடத்தைத்*
*துதி செயாய், இருந்த இடத்து இருந்தேனும்*
*தொழுகிலாய்! வாழி என் மனனே!*
*மதிநுதல் அலர்மேல் மங்கை நாயகனார்*
*மலர்ப்பதம் கிடைப்பது எவ்விதமே?*

ஆனால், ஒரு விஷயம். உலகத்தவர் எந்த பிரயோஜனமும் இல்லாமல், அப்போதைக்கு அப்போது, ஏதேனும் ஒரு உருப்படி இல்லாத விஷயத்தைக் கேட்பதில் தான் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர, ஆத்ம உஜ்ஜீவனத்துக்கான வழியை எத்தனைதான் சொன்னாலும் ஆர்வம் காட்டுவது இல்லை.

சரி, இவர்கள் கேட்பதில்லையே, இனிச் சொல்லி என்ன பிரயோஜனம்? என்று ஆழ்வார்கள் போன்ற மகான்கள் நினைக்கிறார்களா என்றால் இல்லை.



## திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 29-02-2024 | வியாழன் | அங்குரார்ப்பணம் | மூஷிக வாகனத்தில் ஸ்ரீவிநாயகர் |
| 01-03-2024 | வெள்ளி | துவஜாரோஹணம் | ஹம்ஸ வாகனம் |
| 02-03-2024 | சனி | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 03-03-2024 | ஞாயிறு | பூத வாகனம் | சிம்ம வாகனம் |
| 04-03-2024 | திங்கள் | மகர வாகனம் | சேஷ வாகனம் |
| 05-03-2024 | செவ்வாய் | திருச்சி உற்சவம் | அதிகார நந்தி வாகனம் |
| 06-03-2024 | புதன் | வ்யாக்ர வாகனம் | யானை வாகனம் |
| 07-03-2024 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | குதிரை வாகனம் |
| 08-03-2024 | வெள்ளி | திருத்தேர் | நந்தி வாகனம் (மகாசிவராத்திரி) |
| 09-03-2024 | சனி | புருஷாமிருக வாகனம் | திருச்சி உற்சவம் (திருக்கல்யாணம்) |
| 10-03-2024 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனத்தில் நடராஜ ஸ்வாமி திரிசூல ஸ்நானம். | துவஜாவரோஹணம் இராவணாசுர வாகனம் |

கிராமத்திலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். "ஊதுகிற சங்கை ஊதுவோம்; விடியும் போது விடியட்டும்", அந்த நம்பிக்கையில் தானே இறைவன் கூட யாராவது ஒரு மகாத்மா தனக்குக் கிடைப் பானா என்பதற்காக இத்தனை பேரைப் படைக்கின்றான்.

ஒரு டன் மணலை வெட்டிச் சலித்தால் ஒரு குன்றிமணி அளவு தங்கம் கிடைக்கும். அதுபோல கோடிக்கோடி மனிதர்களில் இருந்து "வாசுதேவம் சர்வம்" என்று சொல்லக் கூடிய ஒருவன் கிடைப் பானா என்று பகவானும் "சேதன லாபம்" பெற இடைவிடாது முயற் சிக்கிறான்.

அதற்காகத்தான் உலகத்த வர்கள் சுபாவத்தால் ஆத்ம ஜீவன விஷயத்தை ஏற்க மறுத்தாலும் தொடர்ந்து ஆழ்வார்கள் சொல்லு கிறார்கள். இன்னும் ஒரு விஷயம் இதில் இருக்கிறது. சொல்பவர் களைத் தங்களுக்கு உபகாரம் செய்பவர்களாக நினைத்துக் கொள்ளா விட்டாலும் பரவா யில்லை. விரோதிகளாக அல்லவா கருதுகிறார்கள்.

சரி, கருதினால் கருதி விட்டுப் போகட்டும். அவர்கள் நம்மை விரோதத்தோடு பார்த்தாலும் அவர்களுக்கு நன்மை செய்வதை விட்டுவிடக் கூடாது. இந்த உலகத் திலே பிறந்து நமக்காக திருவேங் கடத்திலே நின்று கொண்டி ருக்கும் அந்த எம்பெருமானைச் சொல்லா விட்டால், இந்த நாவுக்குக் கதி ஏது? இந்தப் பிறவிக்குக் கதி ஏது? இந்தக் கருத்து அப்படியே நம்மாழ்வார் பாசுரமாக விரிகிறது.




*பிறக்கும் பொழுது கொண்டு வந்த தில்லை; பிறந்து மண்மேல்*
*இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை, இடைநடுவிற்*
*குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது*
*இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் கச்சியேகம்பனே!*

**பொருள் :** திருக்காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஏகாம்ப நாதனே! உலகில் பிறக்கும் காலத்தில் ஒரு பொருளும் கொண்டு வந்ததில்லை; பிறந்து, பிறகு வளர்ந்து, வாழ்ந்து இறக்கும் காலத்திலும் ஒன்றும் கொண்டு போவதில்லை; இடைக்காலத்தில் தோன்றும் பொருட்செல்வம், சிவ பெருமானால் வந்தது என்று உறுதி கொண்டு, இரந்து யாசிப்பவர்களுக்குக் கொடுக்கத் தெரியாமல், வீணே மாண்டு போகும் கீழ் மக்களுக்கு என்ன உரைப்பேன்!

**வாழ்வியலுக்கான கருத்து :** வாழ்க்கையில் மக்கள் பெறும் செல்வப்பொருள்கள் எல்லாம் இறைவனால் வருபவை என்று உணர்தல் வேண்டும். "எல்லாம் இறைவன் உடைமை" என்றார் தாயுமானவர். "இப்பொன் நீ, இம்மணி நீ" என்றார் அப்பர். அறிவுடையோர் பொருளை வறியவர்களுக்குக் கொடுத்து, நற்பேறு பெறுவர். அறிவிலாதார் தாம் பெற்ற செல்வத்தை மிகவும் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு அல்லல் படுவர்.

"செல்வத்துப் பயனே ஈதல்" என்பது புறநானூறு. "ஈதல் இசைபட வாழ்தல், அது அல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்றும், "ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை வைத்தி ழக்கும் வன் கணவர்" என்றும் திருக்குறள் நெறிப்படுத்தும். ஆகவே செல்வப்பேறு பெற்றவர்கள், எக்காலத்தும் வறியோர்க்கு வழங்கி வாழ்தலே சிறந்த அறம் என்பதை இப்பாடல் வாழ்வியல் நெறியென்று வழிகாட்டுகிறது.

***– தொகுப்பு : முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***

*சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்வேன்*
*கேண்மினோ,*
*என் நாவில் இன்கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்*
*தென்னாதெனா என்று வண்டு முரல் திருவேங்கடத்து*
*என் ஆனை என் அப்பன் எம்பெருமான் உளனாகவே.*

சொன்னால் விரோதம் வரும். இருந்தாலும் சொல் வேன் கேளுங்கள். என்னுடைய கவிதைகளை திருவேங் கடத்துப் பெருமான் இருக்கும் வரை யாருக்கும் கொடுக்க மாட்டேன் என்கிறார் ஆழ்வார்.

வியாக்யானம் கொஞ்சம் பார்ப்போமே! ஆழ்வார் தொடங்கும்போதே *"சொன்னால் விரோதமிது"* என்கிறார். நீங்கள் சில பிரயோஜனங்களை நினைத்து நரஸ்துதி செய் கிறீர்கள். அதைத் தவிருமாறு நான் உரைப்பது உங்களுக்கு விரோதமாகவேயிருக்கும்".

இன்னொருவிஷயம் "சொன்னால் விரோதம்" என்று உள்ளதே யல்லது, இன்னார்க்கு விரோதம் என்று வெளிப்படையாக இல்லை; உங்களுக்கு விரோதமாகும், என்பது போலவே, சொன்னால் எனக்கு விரோதமாகும் என்பதாகவும் கொள்ளலாம்.

நரஸ்துதி என்பது, மனிதர்களை பட்டம், பதவி, பணம் என நிலையில்லா பொருளுக்காகப் புகழ்வது ஆகும். இவருக்கு என்ன விரோதம் எனில், நரஸ்துதியைப் பற்றி நெஞ்சினால் நினைப்பதும், வாயினாற் சொல்வதுமே தமக்கு ஸ்வரூப விரோதம் என்று திருவுள்ளம், ஆகிலும் சொல்லுவன் என்கிறார்.

காரணம் ஆழ்வாரின் கருணை. சொன்னால் விரோதமேயாகிலும் நீங்கள் படும் அநர்த்தம் பொறுத்திருக்க மாட்டாமையாலே சொல்லாது இருக்க முடியவில்லை.

தன் பக்கலிலே விபரீத புத்தியைப் பண்ணி நிற்கிற சர்வ பாபியாகிற இராவணனைக் குறித்துப் பிராட்டி ஹிதோப தேசம் பண்ணினாற் போலவும், பாபிகளில் தலைவனான இரணியனைக் குறித்தும் அசுரபுத்திரர்களைக் குறித்தும் பிரகலாதாழ்வான் ஹிதோபதேசம் பண்ணினாப் போலவும், தன்னைத் திரஸ்கரித்த இராவணனைக் குறித்து விபீஷ்ணாழ்வான் ஹிதோபதேசம் பண்ணினாப் போலவும், தன்னிடம் விரோதம் கொண்ட சம்சாரிகளைக் குறித்து "ஐயோ, பாவம், இவர்களை விட முடியவில்லையே" என்று ஆழ்வார் ஹிதோபதேசம் பண்ணுகிறார் இந்த பாசுரத்தில்.

*பாசுரம் அறிவோம்...*





**திருமலையைத் தரைவழியாக வாகனங்கள் மூலம் சென்றடைய இரண்டு மலை வழிச்சாலைகள் உள்ளன என்பது அனைவரும் அறிந்ததே. திருமலைக்குப் பேருந்து பயணமே பாதுகாப்பானது. பக்தர்கள் கூடுமானவரை பேருந்துப் பயணத்தை மேற்கொள்ளுங்கள்.**

**ஆந்திர மாநில அரசு பேருந்துகளில் திருமலைக்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் சேர்த்து ஒரே பயண டிக்கெட்டு எடுத்தால் பயணச் சலுகை அளிக்கின்றனர்.**


**அந்த டிக்கெட் மூன்று நாட்கள்(72 மணி நேரம்) வரை செல்லுபடியாகும்.**

**மூத்த குடிமக்களுக்கு ஆதார் அட்டையினைக் காண்பித்தால் டிக்கெட் கட்டண விலையில் கூடுதல் சலுகை உண்டு.**





# வேதங்கள் காட்டும் கணிதம்



சென்ற இதழின் தொடர்ச்சி...

– டாக்டர் எம்.எல். ராஜா, ஈரோடு, 9443370129

## வேதாங்கக் கணக்கீடுகள்

ஒரு செங்கோண முக்கோணத்தின் அடித்தளத்தின் வர்க்கத்தோடு, உயரத்தின் வர்க்கத்தைக் கூட்ட, அதுவே கர்ணத்தின் வர்க்கம் ஆகும். $(B)^2+(H)^2 = (H)^2$ அல்லது $\sqrt{(B)^2+(H)^2} = H$ (கர்ணம்) இதுவே செங்கோண முக்கோணத்தின் முக்கியமான கோட்பாடு. இதை பௌதாயன (1:12), ஆபஸ்தம்ப (1:4 & 5), காத்யாயன (2:4&5) மற்றும் மானவ (3:5) கல்ப சூத்திரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தச் சூத்திரங்கள் வேதத்தின் ஆறு அங்கங்களில் (வேதாங்கம்) ஒன்றான "கல்பம்" என்பதைச் சேர்ந்தவை ஆகும். இக்கோட்பாடு பிற்காலத்தில் பிதாகொரஸ் பெயரில் தவறாகக் கூறப்பட்டது. இந்தச் சூத்திரங்கள் வட்டத்தின் பரப்பளவுக்குச் சமமான சதுரம், சதுரத்தின் பரப்பளவுக்குச் சமமான சதுரம், சதுரத்தின் பரப்பளவுக்குச் சமமான வட்டம் மற்றும் செவ்வகம், செவ்வகத்தின் சமபரப்புள்ள சதுரம் ஆகியவற்றை உருவாக்கும் கணக்கீடுகள் வட்டத்தின் "பை" மதிப்பு மற்றும் எண்களின் வர்க மூலம் போன்ற கணக்கீடுகளையும் விவரிக்கின்றன.

ஒரு வட்டத்திற்கு 360 டிகிரிகள், செவ்வக முக்கோணக் கோட்பாடு மற்றும் தசம ஸ்தான எண் கணக்கீடுகள் ஆகிய இம்மூன்றும் இன்றி, விஞ்ஞானத்தின் எந்த ஒரு நடைமுறையும் சாத்தியம் ஆகாது. ஆகவே இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படை ஆதாரமாகத் திகழ்வது வேதங்களே. ஆகவே வேதங்களைத் துதித்துப் போற்றி ஓதுவதோடு, வேதங்களில் காணப்படும் கணக்கிலடங்கா அரிய விஞ்ஞானப் பொக்கிசங்களை வெளிப்படுத்தி, வையகம் பயனுறச் செய்வதும் நமது கடமையே ஆகும்.

முற்றும்.

## ஸப்தகிரி ஜனவரி 2024 விடைகள்

1. ஷட்திலா, ஜயா ஏகாதசி.
2. நந்தகோபன்.
3. தொண்டரடிப்பொடியாழ்வார்.
4. தை மாதம்.
5. அலங்காநல்லூர்.
6. மூல நட்சத்திரம்.
7. ஸ்ரீசஞ்சீவிராயர் திருக்கோயில்.
8. ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில்.
9. இளங்கோவடிகள்.
10. மாட்டுப்பொங்கல்.
11. மாசி, மிருகசீர்ஷம்.
12. நம்மாழ்வார்.
13. திருக்கச்சி நம்பிகள்.
14. திருமழிசை ஆழ்வார்.
15. மார்கழி, கேட்டை.




## போட்டி எண். 18




சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்

1. செல்வி ஆ.ஜீவா, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம்.
2. செல்வி ஜி.ஸ்ருத கீர்த்தி, மடிப்பாக்கம், சென்னை.
3. செல்வி ஜா.ஹரி திசையான்விளை, நெல்லை மாவட்டம்.




# சிவ தாண்டவம்

சிவபெருமான் தண்டு முனிவருக்கும், பரத முனிவருக்கும் தாண்டவங்களைக் கற்பித்தார் என்று நாட்டிய சாஸ்திரத்தின் நான்காவது அத்தியாயமான தாண்டவ லட்சணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனந்த தாண்டவம் தொடங்கி பிரளயத் தாண்டவம் வரையான தாண்டவங்களுள் நூற்றியெட்டு தாண்டவங்களைச் சிவபெருமான் ஆடியதாகக் கூறுவது மரபு. எனவே இவை சிவதாண்டவங்கள் என்று அழைக்கப்படுகின்றன. எண்ணிக்கை அடிப்படையில் பஞ்ச தாண்டவங்கள், சப்த தாண்டவங்கள் என்று பலப் பிரிவுகளாக அறியப்படுகிறது. சிவராத்திரியை முன்னிட்டு ஸப்தகிரி வாசகர்களுக்காக ஆடல் வல்லானின் அளவற்ற ஆற்றலுடைய 108 தாண்டவங்களை ஒரே ஓவியமாக பிரசுரிக்கப்பட்டுள்ளதைக் கண்ணாரக் கண்டு சிவபெருமானின் திருவருளைப் பெறுவோம்...

ஓவியக்காணிக்கை

திரு.பா.சங்கர், காஞ்சிபுரம், 7708133650




# பொல்லாத மூக்குடைய சூர்ப்பணகை

- திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம்,
9486139685

**ஸ்ரீராமபிரான், சீதை, லக்ஷ்மணன் ஆகிய மூவரும் பஞ்சவடியில் காலம் கழித்து வந்த பொழுது அங்கு வந்த சூர்ப்பணகையே ஸ்ரீராம-ராவண யுத்தத்தை நோக்கிய அடுத்த கட்டத்திற்கு ஸ்ரீமத் ராமாயணத்தை நகர்த்துகின்றாள்**

திவ்ய தம்பதிகளின் திவ்யஸங்கல்பத்தினால் நிகழ்ந்தது ஸ்ரீமத்ராமாயணம் என்னும் இதிகாசம். இவ்விதிகாசத்தின் ஒவ்வொரு நிகழ்வும், அந்நிகழ்வினை நோக்கிய நகர்வும் ஸ்ரீமந்நாராயணனும் ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரும் முன் கூட்டியே திட்டமிட்டபடியே நடந்தேறுகின்றன.

பிரம்மச்சாரியாக இருந்த ஸ்ரீராமபிரானை கிருகஸ்தராக ஆக்குவதற்காக விஸ்வாமித்திரர் வருகிறார். சீதா ராமனின் திவ்ய திருக்கல்யாணத்திற்கும் அவர் வழிவகுக்கிறார்.

அடுத்தபடியாக, ஸ்ரீராமனுக்கு யுவராஜபட்டாபிஷேகம் நடைபெறும் முன்பு மந்தரை எனும் கூனி பரதனின் தாயாராகிய கைகேயியின் மனதை மாற்றி, ஸ்ரீராமபிரான் வனவாசம் செல்லக் காரணமாக இருந்தாள்.

இராவணனின் சகோதரியாகிய சூர்ப்பணகை பஞ்சவடி உள்ளிட்ட வனாந்திரப் பிரதேசங்களில் சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருக்க, அவளுக்குத் துணையாக அவளுடைய ஒன்று விட்ட சகோதரர்களாகிய கரண், தூஷணன், திரிசிரஸ் ஆகியவர்கள் கொண்ட அரக்கர்களின் பெரும்படையுடன் தங்கி இருந்தனர். கண்ணில் படுகின்ற மனிதர்களையும், மிருகங்களையும் கொன்று தின்னும் அந்தச் சூர்ப்பணகை அரக்கர்களின் இயல்பான குணத்தையொட்டித் தவம் செய்யும் முனிவர்களுக்குத் தீங்கு செய்வதை வழக்கமாகக் கொண்டு இருந்தாள்.

வனவாசத்தின் இறுதி கட்டத்தில் ஸ்ரீராமர், சீதா தேவியார், லஷ்மணர் ஆகிய மூவரும் பஞ்சவடிக்கு வந்தனர். அங்கே ஒரு பர்ணசாலையை அமைத்துக் கொண்டு தங்கியிருந்த வேளையில் சூர்ப்பணகை அவர்கள் மூவரையும் பார்த்து விட்டாள். அதிலும் ஸ்ரீராமபிரானின் திவ்யஸ்வரூபத்தைக் கண்டவுடன் அவர் மேல் காதல் கொண்டவள், அவரையே மணாளனாக அடைய விரும்பினாள்.

ஸ்ரீராமபிரானும் சீதா பிராட்டியும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருக்க, அவர்களுக்குச் சற்று தூரத்தில் வில்லேந்திய லக்ஷ்மணப் பெருமாள் நின்று கொண்டிருக்க, அவ்விடத்தை நெருங்கிய சூர்ப்பணகை, "நீங்கள் மூவரும் யார்?" என்று கேட்டாள். "தசரத மஹாராஜாவின் புத்திரனாகிய ஸ்ரீராமனே நான்; இவள் என்னுடைய மனைவியும், ஜனக மஹாராஜாவின் புத்ரியுமாகிய சீதை, இவன் என்னுடைய தம்பி லக்ஷ்மணன்" என்று தங்களைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறுகின்றார் ஸ்ரீராமபிரான்.

சற்றும் தாமதமின்றி, "ஹே நரனே! நான் உன்னை மிகவும் விரும்புகிறேன்" என்று கூறிய சூர்ப்பணகையுடன் சற்றே விளையாட நினைத்த

ஸ்ரீராமபிரான் "பெண்ணே! நானோ ஏகபத்தினி விரதன், என்னை விட இளையவனும், அழகு பொருந்தியவனுமாகிய லக்ஷ்மணனே உனக்குப் பொருத்தமாக இருப்பான்" என்று சொல்ல, உடனே லக்ஷ்மணனின் பக்கம் திரும்பிய சூர்ப்பணகை, "ஹே நரனே! வா, நாம் இருவரும் இணைந்து சந்தோஷ மாக இந்த வனத்தில் திரியலாம்" என்று கூறினாள்.

லக்ஷ்மணனும் "பெண்ணே! நான் தற்பொழுது என் அண்ணனுக்கும் அண்ணிக்கும் சேவகம் புரிந்து கொண்டு இருக்கிறேன். இலங்கேஸ்வரனின் தங்கையாகிய நீ ஒரு அடிமையாகிய என்னைக் காட்டிலும் அரசனாகிய என் அண்ணனை மணப்பது தான் உசிதம்" என்று கூறிவிட்டார்.

தற்பொழுது ஸ்ரீராமபிரான் பக்கம் திரும்பிய சூர்ப்பணகை, "ஹே ராமா! உன் பத்தினி சீதை உயிரோடிருக்கும் வரை நீ என்னை மணக்க விரும்ப மாட்டாய். இப்பொழுதே நான் அவளைத் தின்று விடுகிறேன் பார்!" என்று கூற, உடனே லக்ஷ்மணனும் சூர்ப்பணகையின் மூக்கையும், இரு காதுகளையும் ஒரு கத்தியைக் கொண்டு அறுத்துத் தள்ளினார்.

வலியில் கதறியபடி கரதூஷணர்களிடம் ஓடிய சூர்ப்பணகை விஷயத்தைக் கூற, அவர்களும் அரக்கர்களுடன் கூடிய சேனையைத் திரட்டிக் கொண்டு வந்து போரிட்டனர். ஸ்ரீராமபிரான் அவர்கள் அத்தனை பேரையும் தனியொருவராக எதிர்த்து நின்று வீழ்த்தினார்.

பின்னர் இலங்கைக்குச் சென்ற சூர்ப்பணகை தன் அண்ணன் இராவணனைச் சந்தித்து ஸ்ரீராமர், லக்ஷ்மணர் இருவருடைய பராக்கிரமத்தைப் பற்றியும், சீதா தேவியின் அழகைப் பற்றியும் விளக்கி முறையிட்டாள். அதைக்கேட்ட இலங்கேஸ்வரனும் மாரீசனின் துணையுடன் வஞ்சகமான முறையில் சீதா

## லக்ஷ்மி கடாக்ஷம் நம்மிடமே இருக்க...

நம் வீட்டில் லக்ஷ்மி குடியிருந்து நமக்கு செல்வமும், புகழும் அருள வேண்டும் என்று ஆசைப்படுவோம். ஆனால் அதற்கு உண்டான முறைகளை செய்வதில்லை. அப்படியே செய்தாலும் அதனை முறையாகச் செய்வதில்லை. ஒரு சிறிய மண்கலசம் (மூடியுடன்), சிறிது உப்பு, சர்க்கரை, பச்சரிசி, புளி, பருப்பு, நவதானியம், புனுகு, குங்குமப்பூ, கஸ்தூரி, ஜவ்வாது, ஐம்பொன், சிறிய வலம் புரிச்சங்கு, வெற்றிலைப் பாக்கு இவை அனைத்தையும் வியாழக்கிழமையே வாங்கி வைத்துக் கொள்ளவும். வெள்ளிக்கிழமை காலை 6–7 மணிக்குள் மேற்கூறிய அனைத்துப் பொருட்களையும் கலசத்தில் இட்டு, மண் கலசத்திற்குத் திருமண் பூசி சந்தனம், குங்குமம் இட்டு உங்கள் பூஜை அறையில் வைத்து மஹாலக்ஷ்மியை மனதார வேண்டி, தாயே நீ என்றும் என் குடும்பத்தில் இருந்து அருள வேண்டும் என பிரார்த்தனை செய்து விட்டு, தூப தீபம் காட்டி, பின்வரும் மந்திரத்தை 108 முறை கூறி பின் கலசத்தை மூடி பூஜையறையில் வைக்கவும், வெள்ளிக்கிழமை தோறும் 108 முறை மந்திரம் கூறி வணங்க வேண்டும். உச்சரிக்க வேண்டிய மந்திரம் *"ஓம் தன தான்ய லக்ஷ்மியை வசி வசி வசியை நம:"*. இந்த சக்தி வாய்ந்த மந்திரத்தைக் கூறி பயன் பெற வாழ்த்துக்கள்.



– திரு. எம் அசோக்ராஜா, திருச்சி, 9750333265



தேவியை அபகரிக்க திட்டம் தீட்டினான் என்பதாக ஸ்ரீமத் ராமாயணமென்னும் இதிகாசம் தனது அடுத்த கட்டத்தை நோக்கி நகர்கின்றது.

ஸ்ரீஆண்டாள் தான் பாடியருளிய திருப்பாவையில் “பொல்லா அரக்கன்” என்று இராவணனைக் குறிப்பிடுகின்றாள். அவளுடைய தகப்பனாராகிய பெரியாழ்வாரோ, அவ்வரக்கனுடைய தங்கையின் அங்கங்களுள் ஒன்றான மூக்கினைப் “பொல்லாத” என்ற அடைமொழி கொடுத்துக் குறிப்பிடுகின்றார்.

*“வல்லாளன் தோளும் வாளரக்கன் முடியும் தங்கை*
*பொல்லாத மூக்கும் போக்குவித்தான் பொருந்தும் மலை*
*எல்லா இடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டொலி*
*செல்லாநிற்கும் சீர்த் தென்திருமாலிருஞ் சோலையே!”*

பட்டர்பிரான், சூர்ப்பணகையைக் குறை கூறாமல், அவளுடைய மூக்கை மட்டும் “பொல்லாத மூக்கு” என்று குறிப்பிடுவதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. காட்டில் அலைந்து திரிந்த சூர்ப்பணகையின் நாசிக்கு மனிதர்களுடைய வாசனை எளிதில் எட்டி விடும். அதைக் கொண்டு, காட்டிலுள்ள ரிஷிகளின் இருப்பிடத்திற்கே சென்று அவர்களைச் சூர்ப்பணகை உண்டு விடுவாள்.

அந்தப் பொல்லாத மூக்கு தான் ஸ்ரீராம பிரானின் இருப்பிடத்தைச் சூர்ப்பணகை அறியும்படிச் செய்தது. அவளோ ஸ்ரீராமபிரானுடைய வடிவழகில் ஈடுபட்டதுடன் நில்லாமல், அங்கிருந்த சீதையின் பேரழகினைப் பற்றித் தன் அண்ணன் இராவணனிடம் எடுத்துக் கூறி, அவனுடைய மனதில் “சீதையை அடைந்தே தீருவது!” என்னும் வேட்கையை ஏற்படுத்தினாள்.

தேவர்களும், ரிஷிகளும் தங்களுக்குத் தொல்லை கொடுத்த இராவணனின் அழிவுக்காகப் பல்லாயிரம் வருடங்கள் காத்துக் கிடந்தனர். ஆனால், தங்கை சூர்ப்பணகை ஸ்ரீராம பிரானைச் சந்தித்த ஒரு வருஷ காலத்திற்குள் அண்ணன் இராவணன் மடிவதற்கும் அவளுடைய வார்த்தைகளே காரணமாகி விட்டன.

இவ்விதத்தில் நோக்கினால், தேவர்களும், ரிஷிகளும் அந்தச் சூர்ப்பணகைக்கும், அவளுடைய பொல்லாத மூக்கிற்கும் நன்றி சொல்வதுதான் சரி என்று தோன்றுகின்றது.

தொடர்ந்து அலசுவோம்...

## மங்கள சுலோகங்கள்



*ப்ரஹ்மாணம் சங்கரம் விஷ்ணும் யமம்*
*ராமம் தனும் பலிம் ।*
*ஸப்தைதான் யஸ்ஸ்மரேந்நித்யம்*
*துஸ்ஸ்வப்னஸ்தஸ்ய நச்யதி ॥*

**பிரம்மா, சங்கரர், விஷ்ணு, யமன், இராமன், தனு, பலி ஆகிய இவ்வெழுவரையும் எவன் தினமும் நினைக்கின்றானோ அவனுடைய கெட்ட கனவு அழிவுறுகின்றது.**

பகவத் கீதையில் பெண்களின் மேன்மை பகவானால் சொல்லப் பட்டி ருக்கிறது.

*ம்ருத்யு: ஸர்வஹரச்சாஹம் உத்பவச்ச பவிஷ்யதாம்*
*கீர்தி: ஸ்ரீர்வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: க்ஷமா*

- பகவத் கீதை 10-34

ஸ்ரீ என்றால் அழகிய, இனிமையான, வாக் என்றால் வார்த்தைகள் அல்லது உரையாடல் அல்லது பேச்சு, ஸ்ம்ருதி என்றால் புத்திக் கூர்மை, மேதா என்றால் எதையும் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவு. த்ருதி என்றால் விஸ்வாசம். யாருக்கு விஸ்வாசம்? கணவனுக்கு அதாவது கற்புடமை. க்ஷமா என்றால் பொறுமை. இந்த ஆறு பண்புகளை ஒரு பெண்ணாகப் பிறந்தவள் எந்த நேரத்திலும் கைவிடக் கூடாது. ஏனெனில் இந்தப் பண்புகள் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பெண்ணாகப் பிறந்தவளுக்கு அருளிய வரங்கள் ஆகும்.

அது மட்டுமல்ல. பகவான் கீதையில் "பெண்களின் அன்பு, பொறுமை, கற்பு மற்றும் மகிமையாக நானே இருக்கிறேன்" என்று உறுதிப்பட கூறியிருக்கிறார். ஆகையால் பெண்களின் சிறந்த குணநலன்கள் பகவானின் இருப்பிடத்தைச் சொல்கிறது. ஒரு பெண் பொறுமையாகவும், கற்போடும், குணநலன்களோடும் இருப்பது என்பது "பகவான் அவளோடு, அவளுக்குள் நற்குணங்களாக நிறைந்து இருக்கிறான்" என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

ஒவ்வொரு பெண்ணும் தன்னிடம் பகவான் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் இத்தகைய குண நலன்கள் ஒரு பெண்ணிடம் இருந்தால்தான் பகவான் அவளிடத்தே இருக்கின்றான் என்று பொருள். இவை ஒவ்வொரு பெண்ணிலும் குடி கொண்டு இருந்தால் அவள் ஸ்ரீமஹாலக்ஷ்மி அம்சமாக விளங்குவாள் என்பதே இதன் உட்பொருள். ஸ்ரீமஹாலக்ஷ்மி

# பகவத்கீதையில் பெண்களின் மேன்மை

**திருமதி விஜயலக்ஷ்மி நடராஜன், சென்னை,**
**82480 03302**






## தும்புரு தீர்த்த மஹிமை

ஒரு சமயம் வசிஷ்டர் அருந்ததியை நோக்கி, "திருமலையில் தும்புரு தீர்த்தம் மிகவும் பெருமை நிறைந்ததாகும். அங்கே சென்று நீராடி, பகவானை வழிபட்டு உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்துக் கொண்டு திரும்பு'' என்று அனுப்பினார். அருந்ததியும் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு அஞ்சன கிரியை அடைந்து, தும்புரு தீர்த்தத்தில் நீராடி, பாவ வினைகளைப் போக்கினாள். பின்னர் பகவானை உள்ளத்தில் தியானித்து பன்னிரண்டு ஆண்டுகள் அருந்தவம் புரிந்தாள்.

பகவானும் அவள் தவத்திற்கு மெச்சி, பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று லட்சுமியோடு காட்சியளித்தபோது, அருந்ததியும் "இறைவா மூவுலகத்திலுள்ள எவராயினும் இந்தத் தீர்த்தத்தில் நீராடி எழுந்தால் அவர்களது கொடிய பாவங்களைப் போக்கி அருள வேண்டும். இத்திருமலையின் சிறப்பைக் கூறுபவர்களும், அதனைக் கேட்பவர்களும் அவரவர் விரும்பும் பயனைப் பெற்று நலமோடு வாழ வேண்டும்" என்று வேண்டினாள். "உன் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு பக்த கோடிகளின் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன் என ஸ்வாமியும் அருளினார்.

தாயார் எத்தனை அழகும், இனிமையும், சௌந்தர்யமும், கீர்த்தியும், புகழும் உடையவளோ, அது போலவே இந்த ஆறு பண்புகளைக் கொண்ட பெண்ணும் உலகில் போற்றப்படுபவளாக விளங்குவாள்.

பெண்கள் தங்களின் சுய அடையாளம் தொலைந்து போகாத வண்ணம் வாழ்க்கையை எதிர் கொள்ள வேண்டும். அதாவது தாய்மை, தன்னலம் அற்ற தியாகம், எதையும் எதிர்பாராமல் சேவை செய்தல் வேண்டும். கருணையே வடிவான பெண்ணின் பிறவியானது பொறுமையுடன் பத்து மாதம் சுமந்து ஒரு நல்ல ஜீவனை இந்த பூமிக்கு பெற்று அளிப்பவள். மேலும், தனது குடும்பத்தினர் மற்றும் சுற்றத்தார் மீது தன்னலமற்ற அன்பைப் பொழிபவள். இப்பொறுமை என்னும் தன்மையே தாய்மை உணர்வை பெண்களுக்கு உண்டாக்குகிறது.

இந்த ஈடு இணை இல்லாத பெண்மையின் இயற் தன்மையான தாய்மை உணர்வே பகவானின் கருணையாக பிரதிபலிக்கிறது. தாய்மை உணர்வு கொண்டு அன்பை பகிர்ந்து கொடுப்பதாலேயே உலகில் நேசம் என்ற சொல் இன்றும் இருக்கிறது.

பாரதப் பெண்கள் மேன்மை கொண்ட படைப் பாகும். ஏனெனில் எந்த தேசத்திலும் இல்லாத வகையில் பொறுமை மற்றும் கற்பு நெறியோடு நற்குணங்களுக்கும், பண்புகளுக்கும் உலகிற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றனர் என்றால் அது மிகையாகாது. ஆகையால்தான் "இத்தகைய பெண்களுக்கு ஒரு பாதுகாவலராக தானே பெரும் யுத்தத்தையே நடத்தினார் பகவான்" என்று மஹாபாரதம் விரிவாகக் கூறுகிறது.

நம் சனாதன தர்மத்தில் பெண்கள் உயர் நிலையே தேசத்தின் மிகப் பெரிய சொத்து என்று நம் பெரியோர்கள் நமக்குச் சொல்லித் தந்திருக்கின்றனர். அத்தகைய பெண்குலம் ஆண்களால் பேணி போற்றப்பட வேண்டும் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

"ஒரு கற்புடைய பெண்ணின் மேன்மையைக் காப்பாற்ற யுத்தம் செய்தாலும் தவறில்லை" என்பது சனாதன தர்மத்தின் மாண்பு. தர்ம நெறி தவறி கற்புள்ள பெண்ணின் சுயமரியாதையை அவமானத்திற்கு உள்ளாக்கியவர் எவராயினும் அவன் அரசனே ஆனாலும் தண்டனை அடைவது உறுதி என்பதையே மஹாபாரதம் எடுத்துக்காட்டுகிறது. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இந்த யுத்தம் செய்யக் காரணம் யாதெனில், அந்த அதர்மத்தை அப்போதே தடுக்கா விட்டால் இது போன்ற பல்வேறு துன்பங்களை எதிர்கால

பெண் சந்ததியினர் சந்திக்க நேரிடும் என்பதே ஆகும். பெண்கள் மீது பகவானுக்கு அத்தனை பரிவு, கருணை, அக்கறை, அன்பு. பெண் என்பவள் உலக சிருஷ்டியின் முக்கியமான ஒரு படைப்பு ஆவாள்.

சனாதன தர்மத்தில் பெண்கள் தங்களின் சுய தர்மத்தை கட்டிக் காத்து வருவதாலேயே இப்பூமி தனது ஆதாரத்தை இழக்காமல் இருக்கிறது. ஆகையால் நம் சனாதன தர்மத்தில் பெண்கள் போற்றப்பட வேண்டியவர்கள், பெண்களின் மேன்மைதான் நமது நாட்டின் அடிப்படையாகும். உலகில் எந்தப் பெண்களுக்கும் இல்லாத பெருமை நமது நாட்டுப் பெண்களுக்கு மட்டுமே இருக்கிறது என்றே கூறலாம்.

இராமாயணத்தில் சீதா பிராட்டி, சாவித்திரி, நளாயினி, அருந்ததி, அனுசுயா முதல் நம்மைப் பெற்ற தாய் வரை நம் நாட்டில் கற்புடமைக்கு இன்னும் எத்தனை எத்தனையோ பெண் தெய்வங்களை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். அக்காலப் பெண்களின் கற்புடமை நமக்கு எவ்வாறு பெருமை சேர்க்கின்றனவோ, அது போலவே நாமும் நாளைய பெண் குழந்தைகளின் நல்ல எதிர்காலத்திற்கு ஊக்கம் தரும் வகையில் விளங்க வேண்டும். இது நம் சுய தர்மம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நம் நாட்டின் பெருமை மிக்க பெண்களின் போற்றுதற்குரிய வாழ்க்கையைக் கடைபிடித்து வாழ்ந்து காட்ட வேண்டியது அவசியம் ஆகும்.

இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் நமது குடும்பத்தின் பெருமை, நமது ஆன்மீகப் பெருமை, நமது பாரம்பரியப் பெருமை கலைந்து விடாதபடி என்றும் ஆன்மீக உணர்வோடு நம் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வதுடன் நமது குழந்தைகளையும் அவ்வாறு வளர்ப்பது ஒன்றே, நமது தலையாய கடமையாகும்.

பகவான் கூறியபடி நமது நாட்டின் பாரம்பரிய கற்பு நெறியோடு, சிறப்பாக வாழ்ந்து, நமது குடும்பத்தையும், நமது நாட்டையும், நமது பண்பாட்டையும், நமது ஆன்மீகத்தையும் உயர்த்த வேண்டும். இதுவே நமது கடமையாகும். இந்தக் கடமையை நாம் என்றும் மறந்து விடக்கூடாது. இதைப் பின்பற்றி வந்தால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம். நமக்கு மட்டுமில்லாமல் நமது சந்ததியினருக்கும் இதனை நாம் சொல்லிக் கொடுத்து வர வேண்டும்.

எதிர்காலத்திலும் அக்குழந்தைகள் நமது பண்பாட்டை பிரதிபலிக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த ஆன்மீக பாரதப் பூமியின் பாரம்பரியமானது சங்கிலித் தொடராகத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். காலத்தால் அழியாத பாரம்பரியமான நமது பாரதத் தேசப் பெண்களின் மேன்மை என்றென்றும் மங்காது ஜொலிக்கும்.


## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

### SAPTHAGIRI

(MONTHLY)

FORM IV

*See Rule 8*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | Sri P. Ramaraju, M.A. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | S.O.,T.T.D.Press Compound, K.T.Road, Tirupati. |
| 4. Publisher's Name | : | **Dr. K. Radha Ramana**, M.A.,M.Phil., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office, T.T.D.Press Compound, K.T. Road, Tirupati. |
| 5. Editor's Name | : | **Dr. V.G.Chokkalingam**, M.A., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Tirumala Tirupati Devasthanams |

*I, K. Radha Ramana, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI
Date : 29-02-2024

**(Sd.) Dr. K. Radha Ramana**
*Signature of the Publisher*

# சக்தி யோகினி – விநாயகி

– படிமக்கலைஞர் ப.சரவணன்,
குடந்தை, 8610819456.


ஆண்டாங்கோவில்


திருச்சுழி


திருச்சி உறையூர்


சுசீந்திரம்

கஜானனி, கஜானனை, கணேசினி, கணேஸ்வரி, விக்நேஸ்வரி, விநாயகி, லம்போதரி, ஜங்கிணி, வைய நாயகி எனும் பலப் பெயர்களால் அழைக்கப்படும் பெண் உருவம் கொண்ட இவ்வடிவம் அன்னை லலிதாம்பிகைக்கு 64 கோடி யோகினிகள், பரிவார தேவதைகளாகக் கருதப்படுகிறார்கள் என்று லலிதா சகஸ்ரநாமம் கூறுகிறது. பெண் உருவம் கொண்ட இந்த விநாயகி, யோகினிகளில் ஒருவர் என்று வட மாநிலத்தார் கருதுகின்றனர்.

தென்னாட்டிலோ, அவளை "ஸ்ரீவாஞ்சா கல்ப லதா ஸ்ரீவித்யா கணபதி" என்று சக்தி வடிவமாக பாவித்து ஸ்ரீவித்யா உபாசகர்கள் அவளை வழிபடுகின்றனர். கஜமுகம் கொண்ட இப்பெண் தேவதையின் விநாயகி என்ற பெயரை மாத்திரம் இலிங்க புராணம் கூறுகிறது. ஸ்காந்த புராணம் இவளை கஜானனை என்று அழைக்கிறது. விஷ்ணு தர்மோத்ர புராணம் மாத்ரு கணங்களில் கணேசினியும் ஒருவள் என்கிறது. அந்தகாசூரனின் குருதியைப் பருக, சிவபெருமானால் படைக்கப்பட்ட தேவதையே விநாயகி என்கிறது மத்ஸ்ய புராணம். பெண் தெய்வ நாமாக்களை கூறும் வன துர்கோபநிஷத் எனும் கிரந்தத்தில் இவள் நாமம் கணேஸ்வரி என்று கூறப்பட்டுள்ளது.


தமிழகக் கோயில்களில் 17ஆம் நூற்றாண்டிற்குப் பின் விநாயகி சிற்பங்கள் வடிக்கப் பட்டிருக்கலாம் என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகும்.

**தமிழ் நாட்டில் விநாயகி சிற்பங்கள் அமையப் பெற்றுள்ள சில கோயில்கள்:**

நாகர்கோயில் அருகில் உள்ள சுசீந்திரம் தாணுமாலயன் கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், ஆண்டாங் கோயில், கங்கை கொண்டான், உறையூர், திருச்சுழியல் மற்றும் இன்னும் சில ஆலயங்களிலும் விநாயகி சிற்ப வடிவங்கள் உள்ளன. மேலும், வட மாநிலத்தில் உள்ள ஒரு சில கோயில்களில் இத்தகைய பெண் வடிவில் அருள் புரியும் விநாயகி தனிக்கோயில்களில் எழுந்தருளியுள்ளார் என்பதும் கூடுதல் சிறப்பாகும்.

இதுபோல், மிக அபூர்வமாகச் சில கோயில்களில் மட்டும் காணப்படும், அருளும் ஸ்ரீவிநாயகியின் திருவுருவத்தைத் தரிசித்து வழிபட்டால் பெண்களுக்குத் திருமணத் தடை, களத்திர தோஷம் மற்றும் பல காரியத் தடைகள் நீங்கும் என்பது ஐதீகம்.

# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -92



தொகுப்பு : திரு. இராஜகுமார், சென்னை

புதிருக்கு விடை அறிய 26ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

1. ஏழு சப்த தான தலங்களில் ஒன்று....(8)
3. திருப்பதி ஆனந்த நிலையத்திற்கு தங்கம் வேய்ந்தவர்....(10)
6. பெருமாளின் ஐந்து நிலைகளில் ஒன்று....(4)
10. பாற்கடலைக் கடையும்போது வெளி வந்த விருட்சம்...(5)
11. இராமாநுஜரின் அவதாரம்....(9)
12. கருடாழ்வாருக்காகக் கொண்டாடப் படுவது....(7)
20. சத்ருக்கனின் மனைவி...(7)

## வலமிருந்து இடம்

4. பிரமன் பூமியைத் தோற்றுவித்த நாள்.....(8)
5. ஸ்வாமி தேசிகன் பல காலம் ....(5)தலத்தில் எழுந்தருளினார்.
7. இராமாநுஜர் ....(5) யுகத்தில் அவதரித்தார்
8. பச்சை நிறமுள்ள மரகதத்திற்கு ....(5) என்று பெயர்.
16. குருக்ஷேத்திரப் போரில் மனக்கலக்கமுற்றவன்....(5)
17. துளசிதாஸர் எழுதிய இராமாயணம்.....(8)

## மேலிருந்து கீழ்

2. திருமழிசையாழ்வார் பிறந்த ஊர்.....(5)
6. ஏழு மலைகளில் ஒன்று.....(6)
9. வைகாசி மாத வளர்பிறை ஏகாதசியின் பெயர் ....(3)
13. ........(2) நகரில் பல்லிகள் ஒலிப்பதில்லை.

## கீழிருந்து மேல்

14. மண்டபத் தலங்களில் ஸ்ரீரங்கம்....(7)
15. ஆழ்வார் திருநகரி .....(2) கிரகத்திற்குரிய கோயில்.
16. திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்களும் ஆறு வேத.... (6) ஆகும்.
18. திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது....(11)
19. துவாரகா என்பதன் பொருள்...(9)

## 2024, ஏப்ரல் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 5-13 | திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 09 | தெலுங்கு வருடப் பிறப்பு (க்ரோதி நாமம்) |
| 12-20 | வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 14 | தமிழ் வருடப் பிறப்பு |
| 17 | ஸ்ரீராமநவமி |
| 17-25 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 21-23 | திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம் |
| 22 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருக்கல்யாணம் |



# பங்குனி உத்திரம் காணும் ஸ்ரீபுண்டரீகவல்லி தாயார்

தமிழ் மாதத்தின் இறுதியாக வரும் பங்குனி மாதமானது தெய்வீகமானது. தெய்வத் திருமணங்கள் இம்மாதத்திலேயே நடைபெறுவது ஒரு சிறப்பான அம்சமாகும். பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரத்தில் மஹாலக்ஷ்மித் தாயார் பாற்கடலிலிருந்து உதித்த நாளாகும். திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமியின் பட்டத்து மகாராணியாக ஸ்ரீபுண்டரீகவல்லித் தாயார் எழுந்தருளியுள்ளார். இவர் படிதாண்டா பத்தினியாக விளங்குகின்றார். பிரம்மோத்ஸவங்களில், மற்ற உத்ஸவங்களில் ஸ்ரீதேவி, பூதேவியருடன் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி திருவீதி வலம் வருவார். இந்த ஆலயத்தில் எத்தனையோ உத்ஸவங்கள் நடைபெற்றாலும் பங்குனி மாதம் உத்திர நட்சத்திரம் அன்று நடைபெறும் பங்குனி உத்திர திருவிழா மிகவும் சிறப்பானதாகும்.

புண்டரீக வல்லித் தாயாருக்கு காலையில் சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள் நடைபெறும். மாலை நேரத்தில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தாயாரைக் காணும் பொருட்டு வரும்பொழுது தாயார் சிறிது கோபத்துடன் ஸ்வாமி வருவதை அறிந்து தனது ஆலயக் கதவுகளை மூடுவார். ஸ்வாமி சிறிது பின்னோக்கிச் செல்லச் செல்ல கதவுகள் மெல்ல மெல்ல திறப்பர். கதவு திறப்பதைப் பார்த்த ஸ்வாமி திரும்பி வேகமாக வர, மீண்டும் கதவுகள் மூடப்படும். இவ்வாறு மூன்று முறை நடந்த பின்னர் ஸ்வாமி உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட்டு ஆலய மண்டபத்தில் கோவிந்தராஜ ஸ்வாமி ஸ்ரீபுண்டரீகவல்லித் தாயார் சமேதரராக பக்தர்களுக்குக் காட்சியளிப்பர். நைவேத்தியங்கள் ஆனப் பின் தீபாராதனைகள் காட்டப்பட்டு ஸ்வாமி தனது கருவறைக்குத் திரும்புவார். தாயாருக்கு சிறப்பு ஊஞ்சல் சேவையும் நடைபெறும். இவ்வேளையில் வேதப் பண்டிதர்கள் வேதங்கள் ஓத, பிரபந்த கோஷ்டியினர் பிரபந்தங்களைப் படிக்க, இசைக்கலைஞர்கள் இசைக்கருவிகளை இயக்கி பாடல்களைப் பாடி தாயாரை மகிழ்வித்து சேவிப்பது வழக்கம்.

– தொகுப்பு : திருமதி எஸ். வைஷ்ணவி சேஷகிரி



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

-திரு. எம்.எஸ். சுகுமார்,
சென்னை, 88382 52312.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 30 :** *''வ்யாதிஸ்த்யான ஸம்சயப்ரமாதாலஸ்யாவிரதி ப்ராந்தி தர்சனாலப்தபுமிகத் வானவஸ்தி தத்வானி சித்த விக்ஷேசபாஸ்தே அந்தராயா:*

யோக பயிற்சிக்குத் தடையாக இருப்பவை: வியாதி – சரீரம் வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தால், ஸ்த்யான – யோகத்தில் ஈடுபாடு இல்லாமல் இருத்தல், ஸம்சய – யோகத்தில் நம்பிக்கையில்லாமல் சந்தேகப்படுவது, ப்ரமாத – அக்கறை இல்லாமல் இருப்பது,

ஆலஸ்ய–தமோ குணத்தினால் சோம்பேறித்தனம், அவிரதி – உலகியல் இன்பங்களின் மேல் தீவிர நாட்டம், ப்ராந்தி தர்சனம் – யோகப் பயிற்சியின் போது யோகத்தைப் பற்றிய விபரீத எண்ணங்கள் தோன்றுவது, அலப்த புமிகத்வ – யோகத்தில் மேலும் முன்னேற முடியாமல் செயலற்றுப் போவது, அனவஸ்தி தத்வ – யோகத்தில் சரியாக போய் கொண்டிருந்தாலும் அதில் நிறைவு காணாமல் இருப்பது.

**சூத்திரம் 31 :** *''துக்க தௌர்மனஸ்யாங்க்மேஜயத்வ ச்வாஸாப்ரச்வஸயா விக்ஷேப ஸஹபுவ:''*

நான்கு விக்னங்கள் வர வாய்ப்பு உண்டு. 1) துக்கம் – ஆத்மீகம், பௌதீகம், தைவீகம் என 3 வகைப்படும். 2) தௌர்மனஸ்யம் – மனக்கஷ்டம், 3) அங்கமேஜயத்வம் – யோகம் செய்து வரும்போது தேகத்தில் நடக்கும், 4) ச்வாசம் – பிராணயாமத்தின் போது தன் விருப்பமில்லாமல் மூச்சு வெளியேறி விடுவது ஆகியவை சித்தம் ஒரு நிலைப்படாமல் இருக்கும்போது உண்டாகிறது. ஏகாக்ரக நிலை அடைந்ததும் எந்த விக்னமும் இருக்காது.

**சூத்திரம் 32 :** *''தத்ப்ரதிஷேதார்த்த மேகததத்வாப்யாஸ:''*

ஒரே வஸ்துவில் மனதை நிலைநிறுத்தி இடைவிடாது பயிற்சி செய்து கொண்டேயிருந்தால் தடைகள் யாவும் விலகி விடும். சித்த சலனமில்லாமல் நிர்மலமாகும் போது விக்னங்கள் நீங்கி ஏகாக்ரக நிலை உண்டாகும்.

**சூத்திரம் 33 :** *''மைத்ரீ கருணாமுதிதோபக்ஷாணம் சுகதுக்க புண்யாபுண்ய விஷயாணாம் பாவனாதஷ்சித்தப்ரஸாதனம்: ''*

தனக்குச் சமமாக இருக்கும் மனிதர்களிடம் நட்புடன் பழக வேண்டும். தன்னைக் காட்டிலும் துன்பமாக இருப்பவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும். புண்ணியாத்மா மனிதர்களை கண்டு பொறாமைப் படாமல் அவர்களுடன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மேற்சொன்ன மனோ பாவங்களுடன் இருந்தால் சித்தத்தில் துவேஷம், வெறுப்பு, பொறாமை, கோபம் ஆகிய தோஷங்கள் விலகி சித்தம் தூய்மையாகி விடும்.

**சூத்திரம் 34 :** *''ப்ரச்சர்தன விதாரணாப்யாம் வா ப்ராணஸ்ய:''*

பிராண வாயுவை உள்ளிருந்து வெளியேற்றிய பிறகு சக்திக்கு தகுந்தவாறு அடக்கி பிராணாயாம பயிற்சி செய்தால், வெகு விரைவில் மனம் அடங்கும். சித்தம் நிர்மலமாகி சரீரத்தில் உள்ள நாடிகள் சுத்தியாகும்.

**சூத்திரம் 35 :** *''விஷயவதி வா ப்ரவ்ருத்திருத்பன்னா மனஸ: ஸ்திதி நிபந்தனீ:''*

பிராணாயாம அப்யாசமும், தியான மும் சாதகன் தொடர்ந்து செய்து வரும் போது அவனுக்கு சில தெய்வீக அனுப வங்களை உணர்ந்து முன்னேற உற்சாக மும் நம்பிக்கையும் பிறக்கும்.

**சூத்திரம் 36 :** *''விசோகா வா ஜ்யோதிஷ்மதி:''*

விசோகா என்றால் சோகமில்லாத சுகமயமான சாத்வீக அப்யசத்தால் ராஜஸ குணம் ஒழிந்து விட்ட பிறகு சுத்த மான பிரகாசமான ஒளி தோன்றுவதைக் காணலாம். அதை தியானத்தில் தொடர்பு கொண்டு ஈடுபட்டால் அது மனத்தை ஸ்திரப்படுத்தும்.

**சூத்திரம் 37 :** *''ஞவதராக விஷயம் வா சித்தம்:''*

யோகத்தில் வழிகாட்டும் குருவை அல்லது பற்றற்ற நிலையில் தூய உள் ளம் படைத்த ஒரு மகானை நினைவில் நிறுத்தி யோக அப்யாசமும் தியானமும் செய்தால் மனம் ஒருநிலைப்படும்.

**சூத்திரம் 38 :** *''ஸ்வப்ன நித்ராக்ஞானாலம்பனம் வா:''*

சொப்பனத்தில் சிலருக்கு தெய் வீகக் காட்சிகள், இஷ்ட தெய்வங்கள் உள்ளுணர்வின் அனுபவத்தில் வரும். அத்தகைய அனுபவத்தை தியானத்தில் ஓயாது சிந்தனையில் கொண்டு வந்தாலும் மனம் ஒருமுகப்படும். தமோ குணம் அதிகமாகும் போது தியானம் கூடி வராது. சாத்வீக குணம் அதிகமாகும் போது தியானம் கூடும்.

**சூத்திரம் 39 :** *''யதா பிமதத்யானாத் வா:''*

ஒவ்வொரு மனிதனுக்கு எது பிடித்த மான விஷயமோ அதைப் பற்றி அதிக மாக சிந்திப்பார்கள். யோக சாதகன் தனக்குப் பிடித்தமான ஒன்றைத் தேர்ந் தெடுத்து அதில் மனத்தை ஒருமுகப் படுத்தி சித்தத்தை நிலை நிறுத்தினால் வேறு சிந்தனைகளின் வசம் செல்லாமல் சித்தம் ஸ்திரமாகும்.

**சூத்திரம் 40 :** *''பரமாணு பரமமஹத்வாந்தோ அஸ்ய வசீகரா:''*

அப்யாசம் தொடர்ந்து செய்த பலனால் சித்தம் பக்குவம் பெற்று தியானத்தில் நிலைநிறுத்த பழக்கப்பட்டு வருகிறது. அதன் விளைவால் சூட்சுமத்தில் பெரியதுக்கும் பெரியதான பொருட்களிலும் சாதகன் நினைத்த உடன் சித்தம் பொருத்தப் பட்டு தூய சித்தத்தில் ஆட்சி செலுத்தி சமாதிக்கு தகுதி பெறு கிறான்.

**சூத்திரம் 41 :** *'':க்ஷீண வ்ருத்தே ரபிஜாதஸ்யேவ மணேர்க்ரஹீத்ரு க்ரஹண க்ராஹ்யேஷ தத்ஸ்ததஞ்ஜனா ஸமாபத்தி:''*

தியானத்தில் குறிக்கோளை பிடிப்பவன், பிடிக்கும் செயல், பிடிக்கப்படும் பொருள் என்று பிரித்துக் கூறி விட்டு, மூன்றும் சேர்ந்த ஒன்றாக மாறி விடுவதை "சமாபத்தி" என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 42 :** *''தத்ர சப்தார்த்தக் ஞானவிகல்பை: ஸங்கீர்ணா ஸவிதர்கா ஸமாபத்தி:''*

அந்த சமாபத்திகளிலும் பேதங்கள் உள்ளன. சொல்–அதன் பொருள், அந்தப் பொருளை நன்கு அறியப்படும் ஞானம் என்ற பேதங்களோடு சேர்ந்து அபேதமாக தோன்றுவது "ஸவிதர்க சமாபத்தி" எனப்படுகிறது.

தொடரும்....

## வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 92க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | க | ண் | டி | யூ | ர் | | | | 2 தி |
| ம் | 3 வீ | ர | ந | ர | சி | ங் | க | தே | வ | ன் | ரு |
| க | | | யை | தி | ரி | தி | ய | ச | ட் | 4 அ | ம |
| ட | ல் | | ம் | க | ங் | ர | 5 ஸ்ரீ | | | | ழி |
| ண் | ச | 6 வி | ப | வ | ம் | | | லி | 7 க | ள் | சை |
| தா | வா | ரு | ட | ணி | ம | ட | ரு | 8 க | 9 மோ | க | |
| ந் | ன் | ஷ | ண் | 10 க | ற் | ப | க | ம் | கி | ங் | |
| று | தி | பா | 11 ம | ண | வா | ள | மா | மு | னி | க | ள் |
| கு | த் | த் | 12 க | ரு | ட | ப | ஞ் | ச | மி | ங் | 13 கா |
| க் | ச | ரி | 14 போ | 15 கு | | ன் | ன | ஜூ | ர் | 16 அ | சி |
| ரு | ட் | | ஸ் | ன | மா | த | ரி | ச | ம | 17 ரா | |
| 18 தி | 19 மோ | | | | 20 சு | ரு | த | கீ | ர் | த் | தி |

# ஸ்ரீவேங்கடேஸ்வரா தார்மீக மாநாடு, திருமலை 2024



சனாதன இந்து தர்மத்தைக் பாதுகாப்பதில் தி.தி.தே. முன் நிலையில் உள்ளது. அதன் ஒரு பகுதியாக திருமலை ஆஸ்தான மண்டபத்தில் 03-02-2024 முதல் 05-02-2024 வரை மூன்று நாட் கள் ஸ்ரீவேங்கடேஸ்வரா தார்மீக மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமிக்கு மிகச் சிறப்பாக மங்கல வாத்தியங்களுடன் பூஜைகள் நடத்தப்பட்டு, ஆரத்தி சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் குத்துவிளக்கேற்றி மாநாடு துவங்கப் பட்டது. இம்மாநாட்டினை முன்னிட்டு வேதப் பல்கலைக் கழகத்தினைச் சார்ந்த வேதப் பண்டிதர்கள் வேதம் ஓதினர். பின்னர் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள் தொடக்க உரையாற்றினார். தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் அறிமுக உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பெரிய ஜீயர் சுவாமிகள், சின்ன ஜீயர் சுவாமிகளோடு மடாதிபதிகளும், பீடாதிபதிகளும் கலந்து கொண்டு தங்கள் அருளுரைகளைப் பிரசாதித்தனர். அந்த அருளுரைகளின் தொகுப்பும், மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் பக்கம் எண்.31 முதல் 40 வரை ஸப்தகிரி வாசகர்களுக்காக அளிக்கப் பட்டு உள்ளது.









03-02-2024 முதல் 05-02-2024 வரை
திருமலை ஆஸ்தான மண்டபத்தில்
மிகச் சிறப்பாக நடைபெற்ற
ஸ்ரீவேங்கடேஸ்வரா
தார்மீக மாநாடு

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

03-02-2024 முதல் 05-02-2024 வரை
திருமலை ஆஸ்தான மண்டபத்தில்
மிகச் சிறப்பாக நடைபெற்ற
ஸ்ரீவேங்கடேஸ்வரா
தார்மீக மாநாடு



ஶ்ரீவேங்கடேஸ்வரா தார்மீக மாநாட்டின் நிறைவு விழாவில் திருமலை ஶ்ரீஶ்ரீஶ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், ஶ்ரீஶ்ரீஶ்ரீ சின்ன ஜீயர் ஸ்வாமிகள், பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி, ஐ டி இ எஸ் அவர்கள், இணைச் செயலாட்சித்தலைவர் திரு.வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், அன்றைய இணைச் செயலாட்சித்தலைவர் திருமதி சதா பார்கவி (எச் &இ) ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. உயரதிகாரிகள் பங்கு கொண்டனர்













# ஸ்ரீவேங்கடேஸ்வரா தார்மீக மாநாட்டில் மடாதிபதிகள், பீடாதிபதிகள் வழங்கிய அருளுரைத் தொகுப்புகள்



**ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள், தி.தி.தே.**

மடாதிபதிகள் மற்றும் பீடாதிபதிகளுடைய மதிப்புமிக்க ஆலோசனைகளின்படி தி.தி. தேவஸ்தானத்தின் மூலம் தர்ம பிரசாரத்தை மேலும் பரப்புவோம். இம்மாநாட்டில் நிறைவேற்றும் தீர்மானங்கள் வழியாக தார்மீக பணிகளைத் தீவிரப்படுத்துவோம் என அருளினார்.



**ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள், தி.தி.தே.**

முன் யுகத்தில் யாகம் செய்தால் முக்தி கிடைத்தது. கலியுகத்தில் நாம சங்கீர்த்தனம் செய்தாலே இறையருள் நிச்சயம் கிட்டும் என்பது ஐதீகம். எனவே, பக்தர்கள் இறைநாமத்தைத் துதித்து, தங்கள் இன்னல்களைப் போக்கி முக்தியை நோக்கிப் பயணிக்கட்டும் என அருளினார்.



**ஸ்ரீசுஷ்ருதானந்த மாதாஜிக்கு பதிலாக ஸ்ரீசிவானந்த சரஸ்வதி மாதாஜி (சீடர்)**

சனாதன தர்மத்தைக் கடைபிடிக்காமல் தவறான பாதையில் செல்பவர்களை நல்வழிபடுத்தி, பல பகுதிகளில் தர்ம நிகழ்ச்சிகளை விரிவுபடுத்த வேண்டும். சிறார்கள் மற்றும் இளைஞர்களுக்கு சனாதன தர்மத்தைப் பற்றி தெரிவிக்க தி.தி.தே.வுடன் இணைந்து நிகழ்ச்சிகளை செய்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீஸ்வஸ்வருபானந்தகிரி, ஸ்ரீநிவாச மங்காபுரம்**

திருமலையில் கோவிந்த நாமம் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருப்பது போன்றே திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீநிவாச மங்காபுரம், ரேணிகுண்டா, சந்திரகிரி போன்ற திருமலை சுற்றியுள்ள பிரதேசங்களிலும் கோவிந்த நாம ஸ்மரணை ஒலிக்க வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவித்யாஸ்ரீச தீர்த்த ஸ்வாமிகள், வியாசராஜ மடம்**

சனாதன இந்து தர்மத்தை பரப்புவதிலும், காப்பதிலும், அகண்ட சுந்தரகாண்ட பாராயணம், கீதா பாராயணம் போன்ற பாராயணங்களுக்கு வழிகோலிய தி.தி.தே.விற்கு பாராட்டுக்கள். இளைஞர்களிடையே பக்தி வழிபாட்டை கொண்டு செல்ல வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசிவாநந்த சுவாமிகள், சைவ க்ஷேத்திரம், குண்டூர்**

தி.தி.தேவஸ்தான சேவைகளை கிராமங்கள் தோறும் கொண்டுச் செல்ல வேண்டும். மாவட்டங்கள் தோறும் குருகுலங்களை அமைத்திட வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீஸ்வத்மானந்தேந்த்ர சரஸ்வதி சுவாமிகள்**

இம்மாநாடு இளைஞர்கள் இடையே தர்மத்தை தூண்டி, சன்மார்க்கத்தை நோக்கி அழைத்து செல்கின்றது. சமூக ஊடகங்கள் வழியாக பொய்யான, அடிப்படை ஆதாரமற்றவற்றிற்கு எதிராக தி.தி.தே. வெற்றிகரமாகப் போராடி வருகிறது. பசு பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளும் பாராட்டிற்கு உரியது என அருளினார்.



**ஸ்ரீபிரகாசானந்த சரஸ்வதி சுவாமிகள், பரமானந்த ஆஸ்ரமம், விஜயவாடா**

வசுதைவ குடும்பத்தின் தேவையை அறிந்து கோபத்திற்கும், வெறுப்பிற்கும் அப்பாற்பட்டு இருத்தல் வேண்டும். பகவத் கீதையை எளிய பொருளுடன் அனைவருக்கும் கற்பித்தல் வேண்டும். குருகுலம் அதிக அளவில் நிறுவ வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவிஸ்வயோகி விஸ்வாம்ஜி சுவாமிகள், குண்டூர்**

தி.தி.தே. திருமலையில் இருந்தே சனாதன தர்மத்தை உலகிற்கு கொண்டுச் செல்ல வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசிவதர்சனம் மாதாஜி**

சமூகத்தில் பகைமைகள், ஏற்றத்தாழ்வுகள் போக்கி சனாதன இந்து உணர்வினை வளர்க்க தார்மீக நிகழ்ச்சிகள் அவசியம். கல்வி பாடத்திட்டங்களில் இந்து தர்மத்தின் தோற்றத்தை அறிமுகப்படுத்த வேண்டும். தி.தி.தே. சுபப்ரதம் நிகழ்ச்சியை மீண்டும் தொடர வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீதேவநாத இராமாநுஜ ஜீயர் சுவாமிகள், சம்சாபாத்**

திருமலையில் தியான மண்டபங்கள் அமைத்தல், எஸ்.வி.பி.சி. யூடுப் சானல் மூலம் நிகழ்ச்சிகளை சமூகத்திற்கு எடுத்துச் செல்லுதல், இளைஞர்கள், பெண்கள் இடையே பரோபகாரத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். ஸ்ரீவாரி சேவை திட்டத்தில் மாணவர்களை பங்கேற்கச் செய்ய வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீராமச்சந்திர இராமாநுஜ ஜீயர் சுவாமிகள், பீமாவரம்**

தி.தி.தே. மூலம் பல நல்ல நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதே போன்று திராவிட வேதமும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவிரஜானந்த சுவாமிகள், பிரம்மங்கார் மடம், கடப்பா**

தர்ம பிரசாரத்தை கள அளவில் கொண்டு சென்று, பஜனை மண்டலீகள் வாயிலாக இளைஞர்களுக்கு பகவத் கீதை, சமஸ்கிருதம் கற்பித்தலோடு ஸ்ரீராமர், ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி தத்துவத்தை மக்களிடம் கொண்டு செல்ல தி.தி.தே. வழிகாட்டியாக இருத்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீ ஸ்திதப்ரஜ்ஞானந்த சரஸ்வதி சுவாமிகள்**

ஒவ்வொரு குடிமகனும் இந்து கலாச்சாரத்தையும், பண்பாட்டினையும் கௌரவித்தல் வேண்டும். ஆண்டுதோறும் தி.தி.தே. இதுபோன்ற தார்மீக மாநாடுகளை நடத்துதல் வேண்டும். சிறு வயது முதற்கொண்டு சிறார்களை சனாதன தர்மத்தை நோக்கிச் செல்ல வழி நடத்த வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீ பரிபூர்ணானந்த சுவாமிகள், வியாச ஆசிரமம், ஏற்பேடு**

தொலைதூரப் பகுதிகளிலும் தர்ம பிரசாரம் நடத்த வேண்டும். பாரத தேசம் உலகத்திற்கே முன்மாதிரியாகத் திகழ தர்மமே காரணம் என அருளினார்.



**ஸ்ரீ ஹரிதீர்த்தானந்த சுவாமிகள், நெல்லூர்**

தி.தி.தே.விற்கு பக்தர்கள் அளிக்கும் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு, அறப்பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும். தி.தி.தே. கல்யாண மண்டபங்கள் காலியாக இருக்கும் நாட்களில் ஆன்மீக நிகழ்சிகள் நடத்த வேண்டும்.



**ஸ்ரீசத்யானந்த பாரதி சுவாமிகள், சித்தானந்த ஆசிரமம், கன்னாவரம்**

தி.தி.தே. வாயிலாக தார்மீக நிகழ்ச்சிகள் பெரியளவில் நடத்த

வேண்டும். தர்ம பிரசார பரிஷத் நிகழ்ச்சிகளை மாநில அளவில் மட்டுமின்றி உலகளாவியதாக இருத்தல் வேண்டும். இது போன்ற மாநாடுகள் தொடர வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீரம்யானந்த பாரதி சுவாமிகள், ஸ்ரீசக்தி பீடம்**

திருமலையில் பக்தர்களின் எண்ணிக்கை பெருகி வருவதன் மூலம் இந்து தர்மம் உலகம் முழுவதும் பரவுவதை அறிய முடிகிறது. எஸ்.வி. பக்திச் சானல் சனாதன தர்மத்தைப் பரப்புவதோடு, தர்ம பிரசாரத்தை டிஜிட்டல் மயமாக்குதல் வேண்டும். தி.தி.தே. சிறார் களுக்கான தார்மீக திட்டங்களை உருவாக்கி, தார்மீக விழிப்புணர்வுகளைப் புகுத்தி அவர்களையும் சிறந்த குடிமக்களாக மாற்ற வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீஅஷ்டாக்ஷரி சம்பத் குமார் இராமாநுஜ ஜீயர் சுவாமிகள், விஜயவாடா**

திருமலையில் தரிசனத்திற்கு செல்லும் அனைத்து பக்தர்களும் பாரம்பரிய உடைகளை அணிந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசச்சிதானந்த சரஸ்வதி சுவாமிகள், தபோவனம், துனி**

புத்தகப் பிரசாதம் விநியோகிப்பதை விரிவுபடுத்த வேண்டும். தொலைதூரப் பகுதிகளிலும் பஜனைகள் மற்றும் பக்தி நிகழ்ச்சிகளை தி.தி.தே. அதிகரிக்க வேண்டும் என அருளினார்.



**டாக்டர் ஸ்ரீகௌரி சங்கர் சுவாமிகள், சிருங்கேரி சாரதா பீடம்**

இந்து மதத்திற்குள் மாறி வருபவர்களை வரவேற்கும் நடைமுறைகளை தி.தி.தே. கொண்டு வர வேண்டும். கோயில்கள், மடங்கள் மற்றும் ஆசிரமங்களுக்குப் பயனுள்ள மென் பொருட்களை வடிவமைத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீ செல்லாவிஷ்வநாத சர்மா, காஞ்சி காமகோடி பீடம்**

ஓரியண்டல் கல்லூரிகளை நிறுவி, புராணங்கள் மீது ஆய்வுகள் பல நடத்தி, இந்து சனாதன தர்மத்தைப் பரப்புதல் வேண்டும் என அருளினார்.




**ஸ்ரீராகவுலு சுவாமிகள், விஷ்வ இந்து பரிஷத்**

பெண்களையும் பாராயணத்தில் ஈடுபடுத்துதல் வேண்டும். அனைத்து பகுதிகளிலும் தர்ம பிரசாரங்களை செய்தல் வேண்டும். இளைஞர்கள், சிறார்களிடையே தர்ம பிரசாரத்தை கொண்டு செல்ல ஒவ்வொரு சுவாமிகளும் ஒரு மாவட்டத்தையாவது தத்து எடுத்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவேதுரபாக சுவாமிகள், விஜயதுர்கா பீடம்**

கடந்த ஐந்தாண்டுகளில் திருமலையில் சாமான்ய பக்தர்களுக்கு பல வசதிகள் செய்யப்பட்டு, தரிசனத்திற்கு முன்னுரிமை அளிப்பது சிறப்பு. எதிர்காலத்திலும் இது தொடர வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசுஜயநிதி தீர்த்த சுவாமிகள், ஸ்ரீபாதராஜ மடம்**

சனாதன தர்மத்தில் ஒவ்வொரு பீடாதிபதிகளும் பங்காற்ற வேண்டும். சனாதன இந்து தர்ம பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் பற்றி நாட்டின் ஒவ்வொரு வீட்டிற்கும் தெரிவிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீமுகுந்தானந்த மஹாராஜ், ஜோதீர்மடம், உத்தரகாண்ட்**

சனாதன தர்மம் என்பது மனிதர்கள் மட்டுமின்றி ஆநிரைகளும், தாவரங்களும், விலங்குகளும் கூட செழிப்பாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. நவீன கல்வியில் நமது சனாதன இந்து தர்மம், பண்பாடு, கலாச்சாரம்

குறித்தும் தெரிவிக்க வேண்டும். பசுவை உலகளாவிய தாயாக அறிவிக்க வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவித்யா வல்லப தீர்த்த சுவாமிகள், காணியூரு மடம், உடுப்பி**

நமது சனாதன பாரம்பரியத்தைக் காக்க பல திட்டங்களை செயல்படுத்த வேண்டும். குழந்தைகளிடையே நல்லொழுக்கம் ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகள், தி.தி.தே. வின் உயர் நிலை பிரசாரம் சிறப்பளிக்கிறது என அருளினார்.



**ஸ்ரீசெண்டலங்கார செண்பக மன்னார் ஜீயர் சுவாமிகள், மன்னார்குடி**

உலகளவில் இந்து தர்மத்தை மேம்படுத்தவும், பசு பாதுகாப்பிற்காகவும் தி.தி.தே. செயல்பட வேண்டும். மருத்துவம் மற்றும் கல்வி நிறுவனங்களை விரிவுபடுத்த வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவித்யா விஜயதீர்த்த சுவாமிகள், பெங்களூர்**

தி.தி.தே. 27 செயல் திட்டங்கள் வாயிலாக பல இந்து தர்ம நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. குறிப்பாக தார்மீக, கலச்சார, கல்வி மற்றும் மருத்துவ சேவைகளை செய்து வருவதோடு கலை, இசை, அறிவியல், வேதத்தினை காப்பது போன்றவை சிறப்பு. மேலும், ஆறு மொழிகளில் “ஸப்தகிரி” மாத இதழை வெளியிட்டு வருகிறது. இவை வெற்றியடைய வாழ்த்துகிறோம் என அருளினார்.




**ஸ்ரீஅனுபமானந்த மஹாராஜ், இராம கிருஷ்ணா சேவா சமிதி, கடப்பா**

எதிர்கால சந்ததியினருக்கு தர்மத்தை எடுத்துச் செல்ல சிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இளைஞர்களுக்கு தர்மாசரணையில் ஆர்வம் ஏற்படுத்த வேண்டும். சமஸ்கிருத மொழியை ஊக்குவிக்க வேண்டும். அதன் மூலம் மொழியோடு கலாச்சாரம் இளைஞர்களிடையே சென்றடையும் என அருளினார்.



**ஸ்ரீகமலானந்த பாரதி சுவாமிகள், புவனேஸ்வரி பீடம்**

தர்ம பிரசார பரிஷத் வீடுதோறும் சென்று துண்டு பிரசுரங்களை ஏந்தி பிரசாரம் செய்து வருகின்றன. இந்து தர்மம், பழக்க வழக்கங்கள், பண்பாடு பற்றி ஒவ்வொரு வீட்டிற்கும் தெரிவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீரேவதி ரமணதாஸ் சுவாமிகள், இஸ்கான்**

தி.தி.தி. செயலாட்சித் தலைவரின் சிறப்பு கவனத்தால் எஸ்.வி.பி.சி. சானலில் இராமாயணம், பாகவதம் ஒளிபரப்பு சிறப்பு. கோசாலைகள் பல அமைத்திட வேண்டும். கோவிந்த நாம ஸ்மரணை திருப்பதியிலும் ஒலித்திட வேண்டும்.




**ஸ்ரீ வாசுதேவானந்தகிரி சுவாமிகள், பெத்த புலிபாகா ஆசிரமம், கிருஷ்ணா ஜில்லா**

பசு பாதுகாப்பு, பெண்களை தார்மீக நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்த வேண்டும். தி.தி.தேவஸ்தான பொறுப்பாண்மைக்குழுவில் தர்மாசார்யர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டால் ஆலோசனைகள், அறிவுறைகளுக்கான வாய்ப்பு கிட்டும் என அருளினார்.



**ஸ்ரீசௌந்தரராஜன் ரங்கராஜன் சுவாமிகள், சிலகூரு பாலாஜி ஆலயம், ஐதராபாத்**

தர்மத்தைப் பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்குக் கொண்டு செல்ல வேண்டும். பஜனை, நிகழ்ச்சிகள் செய்தல், மாணவர்களுக்கு ஆளுமை மேம்பாட்டுத் திறன் பயிற்சிக்கான நிகழ்ச்சி நடத்துதல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசுபுதீந்த்ர தீர்த்த சுவாமிகள், மந்த்ராலயம்**

தர்மத்தைக் காக்க பாடுபட வேண்டும். திருப்பதியில் உள்ள அனைத்து இடங்களிலும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும்.

அனைவரும் இந்து தர்மத்தைப் பின்பற்ற வழிவகை செய்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகள், ஸ்ரீவில்லிபுத்தூர்**

திருமலையில் பக்தர்களுக்கு விரைவில் தரிசனம் கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். வேற்றுமைகளைக் கலைந்து ஒற்றுமையுடன் இருத்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீநாராயணாஜி மஹாராஜ், சுவாமிகள், துவாரகா சங்கராசார்ய மடம், குஜராத்**

இந்து சனாதன தர்மத்தை பாதுகாக்க,பரப்ப பல்வேறு பீடாதிபதிகளும், மடாதிபதிகளும் ஒன்றுபட வேண்டும். தி.தி.தே.வின் தர்ம பிரசாரம் சிறப்பாக உள்ளது என அருளினார்.



**ஸ்ரீவித்யா பிரகாசானந்தகிரி சுவாமிகள், சுகபிரம்மம் ஆசிரமம், ஸ்ரீகாளஹஸ்தி**

ஸ்ரீசூக்தம், லக்ஷ்மி அஷ்டோத்தரம் போன்றவற்றை புத்தக வடிவில் வழங்க வேண்டும். சனாதன தர்ம பிரசாரத்தை பள்ளிகளிலும் துவங்க வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், காஞ்சி காமகோடி பீடம்**

வடதேசங்களிலும் தார்மீக பிரசாரம், திருமண் இடுதல் மேம்படுத்த வேண்டும். தர்ம பிரசாரம் செய்து கிராமங்களையும் உயர்ந்த நிலைக்கு கொண்டுச் செல்லவேண்டும். திருப்பதியில் சாலை அமைத்து, அச்சாலைக்கு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்திர சேகர சரஸ்வதி பாதை எனப் பெயரிட்டது பாராட்டுற்கு உரியது என அருளினார்.

**ஸ்ரீரவிசங்கர் குருஜி, பெங்களூர்**

இளைஞர்களை சனாதன தர்மத்தை நோக்கி வழி நடத்தும் நேரம் வந்துவிட்டது. கிராமங்களில் அர்ச்சகர்களுக்கு வைதீக பூஜைகள் பயிற்சி அளித்தல் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் நாட்டுப்புறப் பாடல்கள், யக்ஷ காணம், பஜனைகள், அன்னமய்யா கீர்த்தனைகள் நாத்திகர்களும் ஆஸ்திகர்களாக மாறும் வாய்ப்பினை உண்டாக்கும் என அருளினார்.





**ஸ்ரீவித்யாசங்கர பாரதி சுவாமிகள், புஷ்பகிரி மடம்**

யாகங்கள், பூஜைகள் மற்றும் ஆலய நிர்மாணம் போன்ற தார்மீக நடவடிக்கைகளை தி.தி.தே. சிறப்பாக மேற்கொண்டு உள்ளது. இங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என அருளினார்.




**ஸ்ரீசத்யாத்ம தீர்த்த சுவாமிகள், உத்தராதி மடம்**

ஆலயங்கள், பஜனை மந்திரங்கள் அமைப்பது, ஆன்மீக நூல்கள், ஸ்வாமியின் புகைப் படங்கள் விநியோகம் போன்ற வற்றால் தர்ம பிரசா ரத்தை மேம்படுத்தலாம். பண்டிகை, பாரம்பரியங்கள் குறித்து குழந்தைகளுக்கு விளக்குதல், இதிகாச பிரசாரம் செய்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவித்யாதீச தீர்த்த சுவாமிகள், பலிமாரு மடம், உடுப்பி**

பள்ளி மாணவர்களுக்கு தர்மத்தைப் போதிக்கும் பாட திட்டம் இருத்தல் வேண்டும். யோக பயிற்சியானது மாணவர்கள் உடல், மன வளர்ச்சிக்கு பயனுள்ளது என அருளினார்.



**ஸ்ரீவிதுசேகர பாரதி தீர்த்த சுவாமிகள், உத்தராதிகாரி, சிருங்கேரி சரதா பீடம்**

சாமான்யர்களும் சனாதன தர்மம் குறித்து அறிந்திட வழி செய்தல் வேண்டும். சனாதன தர்மத்தினால் தான் அமைதி ஏற்படும் என்பதை அறிதல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவிஜய தத்தாநந்த சுவாமிகள் தத்த பீடம், மைசூர்**

கோவிந்த நாமம் கோடி முறை எழுதுவோருக்கு தரிசனம் என்ற ஆலோசனை சிறப்பு. நாடு முழுவதும் 5 கோடி பகவத் கீதை புத்தகப் பிரசாதத்தை அளித்திட வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்திர மகாதேசிகன் சுவாமிகள், அகோபில மடம்**

வேதத்தை காத்தால் அது நம்மைக்காக்கும். வேதங்களில் கூறப்பட்டவைகளை பிரசாரம் செய்தல் வேண்டும், வேதபாராயணத்திற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீசித்தேஸ்வராநந்த பாரதி தீர்த்த சுவாமிகள், மௌன சுவாமி மடம், குற்றாலம்**

உருவ வழிபாடு மற்றும் தியானம் மூலம் தர்ம பிரசாரத்தை பரப்புதல் வேண்டும். இந்து தர்ம வளர்ச்சிக்கு தி.தி.தேவஸ்தானத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது என அருளினார்.



**ஸ்ரீசுகுணேந்த்ர தீர்த்த சுவாமிகள், புத்திகே மடம், உடுப்பி**

இதிகாச புராணங்கள் இளைஞர்களிடையே பரப்பி அவர்கள் நற்பாதையில் செல்ல வழிவகை செய்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீயதுகிரி யதிராஜ சுவாமிகள், ஸ்ரீயதுகிரி யதுராஜ மடம், மேல்கோட்டை**

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பல சிறந்த தார்மீக நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இந்த தார்மீக மாநாட்டினை நடத்தும் பொறுப் பாண்மைக் குழுத்தலைவர் மற்றும் செயலாட்சித் தலைவருக்கு வாழ்த்துக்கள் என அருளினார்.



**ஸ்ரீஈசப்ரிய தீர்த்த சுவாமிகள், ஆதமாரு மடம், உடுப்பி**

இந்துக்களிடையே வேத, உபநிஷத் அறிவை வளர்த்தல், கிராமங்களில் ஆலயங்கள் அமைத்தல், வீடுதோறும் சனாதன கலாச்சாரத்தை வளர்த்திட வேண்டும் என அருளினார்.




**ஸ்ரீமதுரகவி வானமாமலை ஜீயர் சுவாமிகள், வானமாமலை, நாங்குநேரி**

அனைவருக்கும் வழிகாட்டியாக இருக்கும் நம் சனாதன தர்மம் யாராலும் தோற்றுவிக்கப் படாதது. எனவே நம் சனாதன தர்ம சம்ப்ரதாயத்தை அனைவரும் கடைபிடித்தல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவராக மகாதேசிகன் சுவாமிகள், ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம், ஸ்ரீரங்கம்**

கிராமங்கள் தோறும் பகவத் கீதையைக் கொண்டு செல்ல வேண்டும். ஆசாரியர்கள் அருளிய சம்ப்ரதாயங்களைக் கடைபிடித்து அதன்படி நடக்க வேண்டும். அவ்வாறு நடத்துவதே நன்மை பயக்கும் என அருளினார்.



**ஸ்ரீவிஸ்வபிரசன்ன தீர்த்த சுவாமிகள், பெஜாவர் மடம், உடுப்பி**

திருமலை திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் பக்தி நிகழ்ச்சிகளை மேலும் விரிவு படுத்தப்பட வேண்டும். ஆண், பெண் பேதமின்றி அனைவரும் தார்மீக நிகழ்ச்சிகளிலும், இறை வழிபாட்டிலும் பங்கு கொள்ள வேண்டும்.

இளைஞர்களிடையே தார்மீக பண்பாட்டினை வளர்த்திட வேண்டும். அனைவரும் இறை நாம ஸ்மரணை செய்திடும் வகையில் குழந்தைகளுக்கு இறை நாமத்தையே சூட்டுதல் வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீஎம்பெருமானார் ஜீயர் சுவாமிகள், ஆழ்வார் திருநகரி**

நம் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கடைபிடித்தல் வேண்டும். அடுத்த தலைமுறையினருக்கும் சனாதன தர்மத்தின் அடிப்படைகளான புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றை கூறுதல், கிராமங்கள் தோறும் நம் கலாச்சாரத்தை கொண்டு செல்ல வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீவேத வர்த்தன தீர்த்த சுவாமிகள், சீரூரு மடம்.**

குழந்தைகளிடையே தார்மீக விழிப்புணர்ச்சிக்கு ஒவ்வொரு கிராமத்திலும் வாரத்திற்கு ஒரு முறை தீர்க்க தரிசனங்கள் மற்றும் பஜனைகள் செய்யப்பட வேண்டும் என அருளினார்.



**ஸ்ரீபறவைக்கோட்டை சின்ன ஆண்டவன் ஸ்ரீஸ்ரீநிவாச கோபால மகாதேசிகன் சுவாமிகள், பௌண்டரீக புரம் ஆசிரமம்**

தி.தி.தே.வின் பல தார்மீக சேவைகள் சிறப்பு. குழந்தைகளுக்கு தார்மீக போட்டிகள், கிராமத்தில் ஆலய அமைப்பு, வேத விஸ்தரிப்பு போன்றவை மேம்படுத்தப்பட வேண்டும். அனைவரிடமும் பக்தியைப் பரப்ப "ஸப்தகிரி" இதழ் மற்றும் ஸ்ரீஸ்ரீநிவாச கல்யாணத்தின் வாயிலாகவும் கொண்டு செல்வதற்கு ஈடாக எதுவுமில்லை என்று அருளினார்.

**ஸ்ரீவித்யேந்த்ர தீர்த்த சுவாமிகள், சித்ராபுர மடம்**



தர்மத்தைக் காத்தால் அது நம்மைக்காக்கும் என்ற கூற்றின் படி சனாதன தர்மத்தை நாம் அனைத்து இடங்களிலும் பிரசாரம் செய்தல் வேண்டும் மற்றும் சமுதாயத்திற்கு சேவை புரிந்தால் நமக்கு புண்ணிய பலன் கிட்டும் என அருளினார்.

**ஸ்ரீசதாசிவ ஆசிரம சுவாமிகள், சிருங்கேரி, வாரணாசி**

விஷ்ணு சகஸ்ர நாம பாராயணம் மற்றும் சமஸ்கிருத சுபாஷிதங்கள் சிறப்பாக கற்பிக் கப்பட வேண்டும். மேற்கத்திய கலாச்சாரம் பரவாமல் தடுக்க வேண்டும். தி.தி.தே.வின் பிரசாரம் மற்றும் சேவைகளை சர்வதேச அளவில் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது என அருளினார்.



**ஸ்ரீசுவித்யேந்த்ர தீர்த்த சுவாமிகள், பெங்களூர்**



திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு வேதங்களை பாது காக்க வேண்டிய அவசியம் உள்ளது. வேதங்கள் பாதுகாக்க வேண்டும் என்றும், பசுக்களுக்கு வேண்டியவற்றை வழங்கி பசு பாதுகாப்பு, கிராமங்கள்தோறும் ஆலயங்களை அமைத்தல் போன்றவை தேவையானது என அருளினார்.

## கோயிலுக்கொரு கோமாதா

மனித குலத்திற்கே பசு ஒரு வரப் பிரசாதமாகும். பசுவின் திருமேனியில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தேவதை வசிப்பதாக புராணங்களும் கூறுகின்றன.

பவிஷ்யோத்ர புராணத்தில் (அத்தியாயம் 156,16.20) ஸ்ரீகிருஷ்ண பகவான் பசுக்களை தானம் செய்வதன் முக்யத்துவத்தைப் பற்றி கூறுகின்றார். மேலும், பசுக்கள் அனைத்து தெய்வங்களின் உறைவிடம் மற்றும் தூய்மையின் உருவம் என்கிறார். எனவே தான் பசுக்களை வணங்குவது மிகவும் முக்கியமானதாகும். அதிகாலையில் பசுவை காண்பதும், பூஜிப்பதும் நன்மையளிக்கும். பசுவை தொடுவது தீர்த்தத்தை சேவிப்பதற்கு சமமாகும். பசுக்களை தானம் செய்வது என்பது தர்மத்தின் மிக உயர்ந்த செயலாகவே கருதப்படுகிறது.

நாடு முழுவதிலும் பசுக்களை பராமரிக்க "கோயிலுக் கொரு கோமாதா" திட்டத்தை தி.தி.தே கொண்டு வந்தது. எந்த ஒரு பக்தரும் இத்திட்டத்தின் கீழ் பசுக்களை நன் கொடையாக வழங்கலாம். பின்னர், நன்கொடையாகப் பெறப்பட்ட பசுக்கள் பல்வேறு கோயில்களுக்கும் வழங்கப் படும். தி.தி.தே.வின் இந்த உன்னத திட்டம் நாட்டின் அமைதி, சுகாதாரம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்காகவும் மற்ற ஆலயங்களிலும் இந்த கோமாதா வழிபாட்டை ஊக்குவிப்பதற்கே ஆகும்.



# மாநாட்டுத் தீர்மானங்கள்

திருமலை ஆஸ்தான மண்டபத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற ஸ்ரீவேங்கடேஸ்வரா தார்மீக மாநாடு திங்கட்கிழமையன்று நிறைவுற்றது. இம்மாநாட்டில் மடாதிபதிகள் மற்றும் பீடாதிபதி களின் ஆலோசனைகளின்படி மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து மாநாட்டின் இறுதி நாளன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்கள் ஊடகத்தினர் இடையே உரையாற்றினார்.

1933ஆம் ஆண்டு திருவேங்கடமுடையானின் திவ்ய வைபவத்தையும், சனாதன தர்மத்தையும் உலகளவில் எடுத்துரைக்க உருவாக்கப்பட்டதே திருமலை திருப்பதி தேவஸ்தானமாகும் என்று கூறினார். தாச சாகித்திய செயல்திட்டம், மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா வாங்மய செயல் திட்டம், அன்னமய்யா செயல் திட்டம், ஆழ்வார் திவ்ய பிரபந்த செயல்திட்டம், நாலாயிர திவ்ய பிரபந்த செயல் திட்டம், ஸ்ரீநிவாச கல்யாணோத்ஸவம் மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வரா வைபவோத்ஸவ செயல்திட்டம் என பல்வேறு செயல்திட்டங்களால் தார்மீக நிகழ்ச்சி களை நாடு முழுவதும் கொண்டு செல்கின்றோம் என்று கூறினார். ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ப்ரக்ஷணசாலை வாயிலாக பசுக்களைக் காத்திடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.

திருவேங்கடவனின் திவ்ய வைபவங்களை எஸ்.வி.பி.சி. சானல் வழியாக உலகெங்கும் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி மொழிகளில் ஒளிபரப்பப் பட்டு வருகின்றது. புராண இதிகாச செயல்திட்டம் வாயிலாக நூல்களும், ஸ்ரீவேங்கடேஸ்வரா ஒலிப்பதிவு செயல் திட்டம் மூலம் பக்தி சங்கீர்த்தனைகளும் வெளியிடப் படுகிறது. 2007, 2008ஆம் ஆண்டுகளில் நான் பொறுப்பாண்மைக் குழுத் தலைவராக சேவை ஆற்றியபோது இரு முறை மாநாடுகள் நடத்திய தாகவும், அப்போது மடாதிபதிகள் கூறிய ஆலோசனைகளின்படி தலித கோவிந்தம், மத்ஸ்ய கோவிந்தம், அர்ச்சகப் பயிற்சி, கல்யாண மஸ்து என பல தார்மீக நிகழ்ச்சிகள் மேற்கொண்ட தாகவும் கூறினார். திருவேங்கடவ னின் திருவருளால் சுமார் 17 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தர்ம பிரசாரத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு தனக்கு கிடைத்தது என்றும் கூறி, மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து விவரித்தார்.

### இந்து மதத்தில் சேர விரும்புவோருக்கு பவித்ர ஜல சம்ப்ரோக்ஷண செயல்முறை

இம்மாநாட்டிற்கு வந்திருந்த ஸ்வாமிகளின் ஒருமித்த கூற்றுப்படி, பிற மதத்தவர் தாங்களாகவே விரும்பி இந்து மதத்தை ஏற்று கொள்ள விரும்பினால் திருமலையில் பவித்ர ஜலத்தால் புரோக்ஷணம் செய்து அவர்களை வரவேற்று, ஒருமுறை ஸ்வாமி தரிசனம் செய்வித்தல்.

### புராண பிரசாரம்

சமுதாயத்தில் குழந்தைகள் முதல் பெரியர்வர்கள் வரை இந்து தர்மத்தை அனைவருக் கும் எளிமையாக புரியும் வகையில் கூறுபவை புராணங்களே ஆகும். புராண பிரவசகர்களுக்கு பயிற்சி அளித்து புராணங்களை பரவலாக பிரசாரம் செய்தல் வேண்டும்.

### திருப்பதியில் புனிதமான சூழல்

திருமலையைச் சென்றடைய திருப்பதி வழி யாகத்தான் செல்லுதல் வேண்டும். யாத்திரிகர்கள் திருமலையைப் போன்றே திருப்பதியிலும் முழுமை யான ஆன்மீகத்தோடும், பக்தியோடும் இருத் தல் வேண்டும். அதற்கேற்றவாறு திருப்பதியையும் மாற்றுதல் வேண்டும்.

### சமத்துவ எண்ணம் உண்டாக்குதல்

எப்பொழுதும் இந்து சமூகம் பலவீனப்பட காரணமே சிலரிடம் உள்ள வர்ண, வர்க்க பாகுபாடே ஆகும். ஆதலால்தான் சிலர் இந்து சமூகத்திலிருந்து

விலகிச் செல்கின்றனர். அவர்களையும் இணைத்துக் கொண்டு சனாதன தர்மம் அனைவருக்கும் சமமானது என்று கூறுவதற்கு அனைத்து விதங்களி லும் முயற்சித்து, அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.

### திருக்கோயில்கள் காத்தல் மற்றும் கட்டுமானம்

இந்திய சமுதாயத்தில் அனைவருக்கும் நல்ல பண்பாட்டினை கற்றுத் தருபவை திருக்கோயில்களே ஆகும். சிதிலமடைந்த ஆலயங்களை சீர்ப்படுத்துதல், ஆலயங்கள் இல்லாத இடங்களில் (பட்டியல் இனத்தவர், மீனவர் வாழும் பகுதிகள்) ஆலயம் கட்டுதல். தி.தி.தேவஸ்தானத்தின் ஸ்ரீவாணி அறக்கட்டளை வாயிலாக பட்டியல் இனத்தவர், மீனவர் வாழும் பகுதிகளில் 3600 ஆலயங்களை கட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### பசுக்களைப் பாதுகாத்தல்

இந்துக்கள் கோவிந்தனிடம் எந்த அளவிற்கு பக்தி கொண்டுள்ளார்களோ அந்த அளவிற்கு பசுக்களிடத்திலும் பக்தி கொண்டுள்ளனர். பசுவா னது அன்னைக்கு இணையானது. இன்றைய நவீன கால சமூகத்தில் பசுக்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. பசு பாதுகாப்பு என்பது இன்றி யமையாதது என்பதை மக்களுக்கு உணர்த்துதல்.

### வேதம், சாஸ்திரம், கல்வி பாதுகாப்பு

இந்து தர்மத்திற்கு மூலமே வேதங்களும், சாஸ்திரங்களுமே ஆகும். எந்த யாகம் செய்ய வேண்டுமானாலும், எந்த நற்செயல்களை செய்ய வேண்டுமானாலும் வேத சாஸ்திரம் அவசியம் ஆகிறது. எனவே வேத சாஸ்திரங்கள் பாதுகாப்பு அவசியமானது என அறிவுறுத்துவது.

### சார்வஜநீன தர்ம, ஆசார, சம்பிரதாய பிரசாரம், பரிரக்ஷணை

இந்து தர்மத்தின் மீதும், ஆசாரங்களின் மீதும், சம்பிரதாயங்கள் மீதும் ஆர்வம், வரவேற்பு, சிரத்தை குறைய காரணமே தகுந்த தர்மபிரசாரம் இல்லாததே ஆகும். ஆதலால் அனைத்து விதத்திலும் அனைவ ரும் அறியும் வகையில் தர்மத்தை பிரசாரம் செய்தல்.

### மாத்ருமூர்த்திகளின் தர்ம நிஷ்டை

எந்த சமுதாயத்தில் தாய் தன் குழந்தைகளை சிறப்பாக வளர்க்கின்றாளோ அந்த சமுதாயம் தர்ம நிலையமாக ஆகின்றது. எனவே, இந்து சமுதாயத் தில் ஒவ்வொரு தாயும் தன் பிள்ளை களுக்கு சிறு வயது முதலே தர்ம போதனைகளை செய்ய தகுந்தவாறு தர்ம நிஷ்டை செய்வதற்கான பயிற்சி அளித்தல்.

### இளைஞர்களுக்கு தர்ம ப்ரீத்தி, தர்ம சக்தி

இன்றைய சமுதாயத்தில் உள்ள இந்து இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் தங்களைச் சுற்றியுள்ள சூழலின் தாக்கத்தால், தங்களின் சுயதர்மத்தை விட்டு விலகி வருகின்றனர். எனவே, இச்சூழ்நிலையில் பல சிறந்த பயிற்சிகள் மற்றும் பிற திட்டங்கள் தேவை.

### அறிவுப் பொருள், அறிவுள் பொருள் பரிரக்ஷணை

இயற்கையாகவே பல அரிதான மரங்களுக்கு நிலையமாக ஸப்தகிரி மலைத்தொடர் அமைந்து ள்ளது. திருமலையில் வனங்களையும், இத்திருமலை யில் பாய்ந்தோடும் ஆயிரக்கணக்கான தீர்த்தங்களை யும் பாதுகாத்து, திருமலை, திருப்பதி மற்றும் இவற்றிற்குட்பட்ட பகுதிகளை உயிரியல், பன்முக க்ஷேத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்.

### பல்வேறு சேவைகள், சத்சங்கம், பஜனை மண்டலி, பிற குழுக்களையும் வலிமைப்படுத்துதல்

2007, 2008ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தார்மீக மாநாட்டின் தீர்மானங்களின்படி பட்டியல் இனத்தினர் மற்றும் மீனவர்களின் மதமாற்றத்தைத் தடுக்க செயல்படுத்தப்பட்டுள்ள, தற்போது குறைந்த அளவில் நடைபெறுகின்ற மற்றும் இடையில் நிறுத்தப்பட்டவைகளை மீண்டும் செயல்படுத்துதல்.

### ஜனசக்தி நிர்மானம்

எத்தனை திட்டங்கள் இருந்தாலும், எத்தனை ஆலோசனைகளை மேற்கொண்டாலும் திறன் கொண்ட செயல் வீரர்கள் இல்லையெனில் வெற்றி என்பது கிடைக்காது. எனவே, ஒவ்வொருவரிலும் தர்மத்தை காப்பதற்கான திறன், அந்த பிரசாரத்திற் கான திறனை கூடுமானவரை நிறைய பேருக்கு பயிற்சி அளித்தல்.

### ஆன்மீக நிகழ்ச்சிகள்

உடல்பலம் எவ்வளவு அவசியமானதோ, அதே போல மனிதனின் ஆத்ம விஸ்வாசத்திற்கும் ஏற்ற

ஆத்ம பலமும் மிக அவசியமானதே ஆகும். எனவே இந்து சமுதாயத்தில் ஆத்ம விஸ்வாசத்தை அதிகரிக்கத் தேவையான பயிற்சிக்கான நிகழ்ச்சி களையும் விரிவுபடுத்தி நடத்துதல்.

### திராவிட வேத வளர்ச்சிக்கான திட்டங்கள்

ரிக்வேதம் முதலான வேதங்களைப் போன்றே பன்னிரு ஆழ்வார்களால் மனித குலத்தின் நலனுக்காக அருளப்பட்ட திராவிட வேதத்திற்கும் உரிய ஊக்கமும் அங்கீகாரமும் அவசியம் தேவை.

### பள்ளி மாணவர்களுக்கான நிகழ்ச்சிகள்

பல்வேறு பள்ளிகளின் தற்போதைய பாடத் திட்டங்களில் இந்து தர்மத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல், அதற்கான தர்ம பிரசார திட்டங்களை மேற்கொள்ளுதல்.

### மொழித் திறன் - தெலுங்கு, சமஸ்கிருதம்

இந்து மதத்தின் அனைத்து அம்சங்களும் பெரும்பாலும் தெலுங்கு அல்லது சமஸ்கிருதத்தில் உள்ளன. இந்த இரு மொழிகளில் அறிவும் சிறார் களுக்கு அவசியம். இளைஞர்கள் இரு மொழிகளை யும் புரிந்து கொண்டு பயிற்சி செய்தல் வேண்டும்.

### சமூக ஊடகங்கள்

இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் தகவல்கள் விரைந்து அனைவரிடமும் சென்று அடைவதில் சமூக ஊடகங்கள் மிக மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, இந்து தர்மத்தை குறித்து பிரசாரம் செய்ய அனைத்து பிரசார மற்றும் ஒளிபரப்பு வழிகளை பயன்படுத்துதல்.

### அனைத்து தார்மீக நிறுவனங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு இத்தகைய பிரசார மாநாடுகளை நடத்திட தி.தி.தே.வுடன் ஒத்துழைக்க வேண்டுதல்

இந்து தர்மத்தைக் காக்க இம்மாநாடு மிக முக்கிய பங்களிப்பதைக் காட்டுகிறது. இது போன்ற மாநாடுகளை ஆண்டிற்கு ஒருமுறையாவது திருமலையிலோ அல்லது திருப்பதியிலோ நடத்த வும், அதேபோல் கிராம அளவிலோ, மாவட்ட அளவிலோ குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்திட தீர்மானித்துள்ளனர். இம்மாநாட்டில் மேற்கொள்ளப் பட்ட தீர்மானங்கள் தி.தி.தே. மட்டு மின்றி இந்து தர்மத்தைப் பாதுகாப்பதில் ஈடுபட்டு உள்ள அனைத்து தார்மீக அமைப்புகளும் நிறை வேற்ற வேண்டும் எனத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

மேலும், திருமலை ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகளுக்கும், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்ன ஜீயர் ஸ்வாமி களுக்கும், மாநாட்டிற்கு வருகை புரிந்த அனைத்து மடாதிபதிகளுக்கும், பீடாதிபதிகளுக்கும், தார்மீக அமைப்பு தலைவர்களுக்கும் தி.தி.தே. பொறுப் பாண்மைக் குழுத்தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள் தமது நன்றியைத் தெரிவித்தார். அதேபோல் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், இணைச் செயலாட்சித் தலைவர் திரு. வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், அன்றைய இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி சதா பார்கவி (எச் &இ) ஐ.ஏ.எஸ். அவர்கள், பிரதான மக்கள் தொடர்பு அலுவலர் டாக்டர் டி.ரவி அவர்கள் மற்றும் தி.தி.தே. உயர் அதிகாரிகள் இம்மாநாடு சிறப்புற நடைபெற பெரும் பங்காற்றினர்.

**தொகுப்பு : திரு. பரந்தாமன், சத்திரவாடா.**

திருமலைக்குச் சென்றடைய இரண்டு மலை வழிச் சாலைகள் உள்ளன. அதில் ஒன்று வாகனங்கள் திருமலையைச் சென்றடையவும், இரண்டாவது வழி வாகனங்கள் திருப்பதிக்குச் சென்று அடையவும் உபயோகத்தில் உள்ளன. மலைவழிச் சாலைகள் இயற்கை எழில் நிறைந்தவை. பசுமையான மரங்கள், அரிய வகை விலங்குகள் போன்றவற்றையும் உள்ளடக்கியது. மலைவழிச் சாலையில் செல்லும் போது கோவிந்த நாமத்தை உச்சரித்துக்கொண்டே செல்ல வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு தி.தி.தே. கோவிந்த நாமத்தை எழுத்து வடிவில் நமக்காக ஆங்காங்கே வைத்து உள்ளனர். இத்தகைய எழில் மிகு மலை வழிச் சாலையில் தேவையற்ற பொருட்களையும், பிளாஷ்டிக் பொருட்களையும் வீசி அதன் எழிலை பாழ்படுத்தாமல் இருப்பது நமது கடமை ஆகும்.






# பங்குனி உத்திரத்தில் ஸ்ரீரெங்கநாயகித் தாயாரும் நம்பெருமாளும்...

திருமதி எஸ்.வைஷ்ணவி,
திருப்பதி

பெரிய பிராட்டியின் திருநட்சத்திரம் பங்குனி உத்திரம் ஆகும். அனைத்து உயிர்களுக்கும் அன்னையாக, கருணைப் பெருங்கடலாக, நாம் செய்யும் தவறுகளைப் போக்கி புருஷாகாரம் செய்பவளாகத் திகழ்பவள் பெரிய பிராட்டியார். ஸ்ரீரங்கத்தில் அந்த ஒரு நாள் மட்டுமே விசேஷமாக கோலாகலமாக மட்டையடி, பிரணய கலஹம் மற்றும் தாயாருக்கும் நம்பெருமாளுக்கும் சேர்த்தி நடைபெறும்.

பங்குனி உத்திரம் அன்று காலை பெருமாள் எட்டு வீதிகளிலும் தங்கப் பல்லக்கில் வீதிவலம் வருவார். அந்தத் திருவீதி உலாவின் போது சக்கரத்தாழ்வார் சன்னதியைத் தாண்டியவுடன் திருமாலின் முகத்தை கூடுதல் பொலிவாக்கிக்கொண்டு, தாயார் சன்னதியை அடைய விரைந்து செல்லுகையில், பெருமாள் வருவதைக் கண்டு தாயார் சன்னதிக் கதவுகள் மூடப்படுகின்றன. பங்குனி ஆயில்யம் அன்று கமலவல்லித் தாயார் திருநட்சத்திரத்திற்காக உறையூர் சென்று, கமலவல்லித் தாயாருடன் சேர்த்தி கண்டருளி வந்த பெருமாளை தாயார் அனுமதிக்க மறுப்பதால் கதவுகள் சாத்தப்படுகின்றன. மூடப்பட்ட கதவுகளைக் கண்ட பெருமாள் மெல்ல மெல்ல பின்னே சென்று நின்று விடுகிறார்.

பெருமாள் சென்றதை அறிந்து கதவுகள் திறக்க, திரும்பவும் பெருமாள் மின்னல் வேகத்தில் உள்ளே நுழைய முற்படுகிறார். ஆனால், இம்முறையும் கதவுகள் மூடப்பட்டதுடன் மலர்கள், தயிர் ஸ்வாமியின்மேல் வாரி இரைக்கப்படும். மூன்றாவது முறையும் இவ்வாறே நடைபெறும். தயிர் குடத்தை கையில் ஏந்திக்கொண்டு, அதிலிருக்கும் தயிர் பல்லக்கு மேல் வீசப்படுகிறது. தாயார் தன் மீது கோபத்தில் இருப்பதால் இனி பேச்சு வார்த்தை நடத்துவது நல்லது என பெருமாளுக்குப் புரிந்து விட்டது. அரையரை அனுப்பி சமாதானம் செய்ய எண்ணினார்.

## பிரணய கலஹம்:

பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நடக்கும் வாக்குவாதம், பெருமாள் சார்பாக அரையரும், தாயார் சார்பாக பண்டாரியும் விண்ணப்பம் செய்வர். இந்த விண்ணப்பங்கள் தம்பிரான்படி வியாக்கியானத்தை கொண்டு அரையர்கள் சேவிப்பார்கள். இதனை தாயாரும் நம்பெருமாளும் உரையாடும் வகையில் தரிசிப்போம்.

## நம்பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்

தாம் தாயாரைக் காண வந்தால் தன்னை உள்ளே வரவேற்று, சிம்மாசனத்தில் உட்கார வைத்து, உபசரிப்பது முறை. இன்றோ தம்மைப் பார்க்காமல், வாயில் கதவுகளை மூடி, இவ்வாறு தமக்கு அவமானம் செய்வதேன்?

## தாயார் அருளிச் செய்த பிரகாரம்

பெருமாள் எப்போதும் போல் எழுந்தருளி இருப்பது மெய்யானால், அவருடைய திருக்கண்கள் சிவந்து இருப்பது ஏன்? கஸ்தூரித் திலகம் கலைந்து இருப்பது ஏன்? திருவதரம் வெளுத்து இருப்பானேன்? திருமேனியில் குங்குமப் பொடி இருப்பானேன்? திருக்கையில் கணையாழி எங்கே? தாம் நேற்று எழுந்தருளிய இடத்திற்கே செல்லலாம்.

### நம்பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்

செங்கோலுடையர் திருவரங்கச் செல்வனார். ஆதலால் இரவு முழுவதும் தூக்கமின்றி ஜெகத் ரக்ஷகம் செய்ததால் கண்கள் சிவந்து இருக்கிறது.

சூரியனின் கிரணங்கள் விழுந்த காரணமாக கஸ்தூரி திலகம் கலைந்திருக்கிறது. அசுரர்களை அழிக்க பாஞ்சஜன்யத்தை பயன்படுத்தியதால் அதரம் வெளுத்து இருக்கிறது. தேவதைகள் புஷ்பங்கள் தூவியதால் குங்குமம் திருமேனியில் இருக்கிறது. தாம் வேட்டையாடி வரும் போது திருமங்கை ஆழ்வார் தன் பொருட்களைக் களவாடியதால் அவருக்கு அறிவுரை வழங்கி, அவரைத் திருத்தி, பின்னர் ஆபரணங்களை கருவூலத்தில் சேர்த்து விட்டு வரும் சமயத்தில் தனது கணையாழி தொலைந்து விட்டது என பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்.

### தாயார் அருளிச் செய்த பிரகாரம்

கணையாழி மோதிரம் காணாமல் போனது மெய் அல்ல. தாங்கள் அதிகாலையில் உறையூர் சென்று அங்கு நாச்சியாருடன் சேர்த்தி கண்டு அருளிய தடையங்கள் இவை. இப்பொய்களை ஏற்க இயலாததால் நேற்று எழுந்தருளிய இடத்திற்கே இன்றும் செல்லலாம் என்று தாயார் அருளிச்செய்த பிரகாரம்.

### நம்பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்

நாம் உறையூரை கண்ணாலும் கண்டதில்லை. காதாலும் கேட்டதில்லை. யாரோ சிலர் சொன்னதை நம்பி தன்னை அவமானம் செய்கிறீர்கள். ஆகவே, தான் கொடுக்கும் மலரை ஏற்றுக்கொண்டு உள்ளே தம்மை அழைக்கச் சொல்லி பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்.

### தாயார் அருளிச் செய்த பிரகாரம்

ஏழாம் திருநாள் அன்று இங்கு எழுந்தருளிய போது நாங்கள் செய்த உபசாரங்களை சரியாக ஏற்றுக் கொள்ள வில்லை. நாங்கள் தங்களின் திருமஞ்சனத்திற்கு வெந்நீரும், உடுக்கப் பட்டாடையும், பலவிதமான திருவமுது அக்காரவடிசல் போன்ற பல ஆகாரங்களைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளாமல் தாங்கள் மிகவும் அசதியாக இருந்தீர். நாங்கள் பதற்றமாக தங்கள் திருமேனிக்கு என்ன ஆயிற்று என்று தங்களின் அந்தரங்க பரிஜனங்களிடம் விசாரித்ததில் தாங்கள் உறையூர் சென்று வந்த விஷயம் அறிந்தோம். ஆகையால் தாங்கள் எதுவும் சொல்ல வேண்டாம் என நாச்சியார் அருளிச்செய்த பிரகாரம்.

### நம்பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்

இந்த சந்தேகங்கள் தீர தான் சில பிரமாணங்கள் (சத்யம்) செய்து தருகிறோம். அவை யாவை





என்றால் கடலில் முழுகுகிறோம்; அக்னிப்பிரவேசம் செய்கிறோம்; பாம்புக் குடத்தில் கை இடுகிறோம் என்று பெருமாள் அருளிச்செய்த பிரகாரம்.

### தாயார் அருளிச் செய்த பிரகாரம்

பிரளய காலத்தில் தன் வயிற்றிலே உலகத்தையே வைத்துக்கொண்டு ஆலிலையில் துயின்ற உமக்கு சமுத்திரத்தில் முழுகுவது அருமையா? பிரம்மாவின் வேள்வியில் அவிர்பவித்த உமக்கு அக்னி சுடுமோ? திருவனந்த ஆழ்வான் மீது திருக்கண் வளர்ந்திருக்கிற உமக்கு பாம்புக் குடத்தில் கைவிட்டால் பாம்பு கடிக்குமா? இப்படிப்பட்ட பிரமாணங்களை ஏற்கும் இடத்திற்குச் செல்லவும் என்று நாச்சியார் அருளிச் செய்த பிரகாரம்.

### பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்

நாம் சொல்லும் பிரமாணங்களை பரிகாசம் செய்து, சற்றும் இரக்கம் வராமல் கோபத்தில், “கண்கள் சிவந்து இருக்கு! திருமுகம் கருத்து இருக்கு! இப்படி இருந்தால் நமக்கு என்ன கதி இருக்கிறது? அழகிய மணவாளன் தாயார் சன்னதி வாசலில் நிறுத்தப்பட்டு உள்ளார் என்ற அவமானம் தங்களுக்கே!” எனவே இந்த மலரை ஏற்றுக்கொண்டு தம்மை அழைக்கச் சொல்லி பெருமாள் அருளிச் செய்த பிரகாரம்.

### தாயார் அருளிச் செய்த பிரகாரம்

தாம் ஆண்டுக்கொரு முறை இப்படி வழிமாறி சென்று இங்கு மீண்டும் வந்து பிரமாணங்கள் செய்வதை பொறுக்க மாட்டோம். நம்மாழ்வார் வந்து மங்களமாக சில விஷயங்களைச் சொன்னதால் பொறுத்தோம்! பொறுத்தோம்! பொறுத்தோம்!!! பெருமாளை உள்ளே எழுந்தருளச் சொல்லி நாச்சியார் அருளிச் செய்த பிரகாரம். அதன் பிறகு பெருமாளின் மாலை, சந்தனம், மேலாடை ஆகியவை தாயாருக்கு கொடுக்கப்பட்டு, விண்ணப்பம் செய்த எல்லோருக்கும் மரியாதை வழங்குவர். தமது மாலையைத் தாயாருக்கு அளித்த பின்னர் பெருமாள் மாலையில்லா பெருமாளாக காட்சியளிப்பார். மத்தியஸ்தம் செய்து வைத்த நம்மாழ்வாருக்கு பெருமாளிடமிருந்து மரியாதை வழங்கப்படும்.

முதல் ஏகாந்தம் நம்பெருமாள் தாயார் சன்னதி முன்னர் பல்லக்கில் தாயாரை பார்த்தபடி நேராக எழுந்தருளுவார். ஏகாந்தத்தில் மேளதாளங்கள் வாசித்த பின்னர் முதல் ஏகாந்த தளிகைகள் சமர்ப்பிக்கப்படும். முதல் ஏகாந்தம் முடிந்த பின்னர் பெருமாள் தன் பல்லக்கில் சேர்த்தி மண்டபம் செல்ல, தாயாரும் பெருமாள் கொடுத்த பரிசுகளுடன் பெருமாளுடன் சேர்த்தியில் நம் அனைவருக்கும் சேவை சாதிப்பார். ஸ்வாமி இராமாநுஜர் சரணாகதி அருளிய கத்யத்ரய கோஷ்டியும் நடைபெறும்.



# ஏகாதசி விரதம்
## புராண வரலாறுகளுடன்...

– திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.

### காமதா ஏகாதசி

முன்பொருகால் வசிஷ்டர் திலிப் மகா ராஜாவுக்கு காமதா என்ற சித்திரை மாத சுக்லபக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கூறிப் போந்தார். அதனை உனக்குக் கூறுகிறேன் என்று கண்ணன் சொல்லத் தொடங்கினான்.

நாகலோகம் தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் நிறைந்த இன்பலோகம். இதனை புண்டரீகன் என்ற நாகராஜன் ஆண்டு வந்தான். அங்குள்ள நாகர்கள் இஷ்டபடி உருவம் எடுத்துக்கொள்ள வல்லவர்கள். விரும்பிய இடத்திற்கும் செல்ல சமர்த்தர்கள். நாக லோகத்தில் வசித்து வந்த கந்தர்வர்களில் லலிதன் என்பவனும், அப்ரஸஸ்களில் லலிதை என்பவளும் மனமொத்தவர்களாய், அழகிற்சிறந்தவர்களாய், செல்வம் நிறைந்தவர்களாய் அங்கே வாழ்ந்து வந்தனர். லலிதன் தன் கானத்தில் மிகத் தேர்ச்சி பெற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாக விளங்கினான்.

ஒருநாள் நாகராஜன் லலிதனை தன் அவையில் பாட அழைத்தான். அவன் தன் மனைவியைக் கண நேரமும் பிரிந்திருக்க சகிக்க மாட்டான். அதனால் அவன் தனியே வந்து அவையில் பாடும்போது தன் மனைவி நினைவால் ஸ்வர லயங்களில் தவறு ஏற்பட்டது. கார்க்கோடகன் என்ற மந்திரி அரசனிடம் கோள் கூறினான். நாகராஜன் சினந்து, லலிதனே! நீ என் அவையில் சாம்பரவனாய் தவறாகப் பாடினாய். நீ அரக்கனாகக் கடவாய் என்று சாபமிட்டான். உடனே லலிதன் அரக்கனானான். மலை போன்ற முகம், குகை போன்ற வாய், பத்து மைல் நீள கைகள், பயங்கரமான கண்கள், 80 மைல் உயரமுள்ள உடம்பு இவற்றுடன் பயங்கரமாக விளங்கினான்.

லலிதை ஓடோடி வந்தாள். என்ன செய்வேன். இந்தச் சாபம் எவ்வாறு போகும் என்று புலம்பினாள். கணவனுடன் காட்டில் சஞ்சரித்தாள். அவன் தயை இல்லாமல் எல்லாவற்றையும் அடித்து கொன்று தின்று கொண்டு இருந்தான். ஒரு நாள் அவனோடு சென்ற பொழுது ஒரு முனிவரது ஆசிரமத்தைக் கண்டாள். ஆசிரமத்திற்குச் சென்று முனிவரை வணங்கினாள். முனிவரிடம் அவள் தான் வீரதன்வா என்ற மகாத்மாவான கந்தர்வனுடைய மகள் என்றும், தனது பெயர் லலிதை என்றும், தன் கணவனின் சாப விமோசனத்திற்காக தங்களைக் காண வந்தேன் என்றும் கூறினாள்.

முனிவர் அகக் கண்ணினால் அனைத்தையும் கண்டார். லலிதையிடம் விரைவில் சித்திரை மாத சுக்லபக்ஷ ஏகாதசி வருகிறது. விரும்புவார் விரும்பிற்றெல்லாம் கொடுப்பதால் இதற்கு காமதா என்று பெயர். இதில் விரதமிருந்து அதன் பலனை உன் கணவனுக்கு அர்ப்பணம் செய்தால் அவனுடைய அரக்க உருவம் நீங்கும் என்று கூறினார். லலிதையும் சிரத்தையுடன் விரதம் நோற்று பலனை அவனுக்கு அளித்தாள். அவன் சாபம் நீங்கப் பெற்று மேலும் அழகனாகத் திகழ்ந்தான். தங்க விமானம் வந்தது. இருவரும் ஏறி இந்திரலோகம் அடைந்தனர்.

இந்த ஏகாதசி பிரம்ம வித்யாதி பாபங்களைப் போக்கும். இந்த வரலாற்றைப் படிப்பதாலும் கேட்பதாலும் வாஜ்பேய யாக பலனைப் பெறுவர் என்று தர்மனிடம் கண்ணன் கூறினான்.

சித்திரை மாதத்திய கிருஷ்ணபக்ஷ ஏகாதசியின் பெயர் பாபமோசினி. இதன் பெருமையை லோமச முனிவர், மாந்தாதாவுக்குக் கூறினார். அந்த வரலாற்றை கண்ணன் தர்ம புத்திரனுக்குக் கூறினான். இந்த பாபமோசினி ஏகாதசி பிசாசுத் தன்மையைப் போக்குவது. அறத்தை மேலும் மேலும் வளர்ப்பது விரும்பியதெல்லாம் கொடுப்பது.

ஒரு வசந்த ருதுவில் இந்திரன் முதலான தேவர்கள் சைத்ர ரதம் என்ற குபேரனுடைய நந்தவனத்தை அடைந்தனர். ஆங்கே அப்ஸரஸ்களுடன் கூடி மகிழ்ந்தனர். நந்தவனத்துக்கு அருகாமையில் ஏகாந்தமான இடத்தில் பல முனிவர்கள் கூட்டத்தில் மேதாவி என்ற பிரும்மகாரி முனிவன் ஒருவன் மிகுந்த தேஜஸ்வியாய் விளங்கினான்.

அவன் தவத்தில் சிறந்தவன். அழகில் மன்மதனை விஞ்சியவன். அப்ஸர மங்கையர் அவனை மயக்கினர். ஆனால் முடியவில்லை. வெகு தூரத்தில் இருந்து கொண்டு, வீணையை மீட்டி பாடிக் கொண்டிருந்தாள் மஞ்சு கோஷா என்ற அப்ஸரஸ் பேரழகி. இவள் பாடுவதிலும், ஆடுவதிலும், வீணை வாசிப்பதிலும் நிகரற்றவள்.

அவளுடைய ஒவ்வொரு அங்கத்தையும் மன்மதன் தன்னுடைய போர்க்கருவி ஆக்கினான். மேதாவியின் சித்தமும் கலங்கிற்று. இவளிடம் ஆசை கொண்டான். இருவரும் பகலிரவு அறியாமல் பல நாள் மகிழ்ந்தனர். முனிவன் ஆசாரத்தை விட்டான். தபஸ்ஸையும் நாளுக்கு நாள் இழந்து வந்தான்.

ஒருநாள் மஞ்சுகோஷா முனிவனிடம் தன் இருப்பிடத்திற்கு தான் செல்ல அனுமதி கேட்டாள். அவன் இசையவில்லை. இது ஸந்த்யா காலம். காலையில் செல்லலாம் என்றான். உடனே மஞ்சுகோஷா “முனிவர் பெருமானே, இம்மாதிரி எத்தனை ஸந்த்யா காலங்கள் வீணாயின. எண்ணிப் பாருங்கள்” என்றாள்.

முனிவன் சிந்தித்தான். எண்ணினான். ஐம்பத்தேழு ஆண்டுகள் முடிந்து இருந்தன. அவனுக்கு கோபம் மேலிட்டது. கண்கள் சிவந்தன. அரிதில் ஈட்டிய தவம் கெட்டது. தன்னுடைய தவத்திற்கு எமனாய் வந்த அவளைப் பிசாசாகும்படி சபித்தான்.

சாபத்தினால் வருந்திய அவள் முனிவரைப் பார்த்து, முனிவரே! சாதுக்களோடு ஏழு அடி நடந்தாலும், சிறிது நேரம் உரையாடினாலும் அவர்கள் மேலான நலன்களைப் பெறுவர் என்று பெரியோர் சொல்லுகின்றனர். நான் தங்களுடன் பல்லாண்டுகள் கூடியிருந்துள்ளேன். எனக்கு நலன் ஏற்படும்படி அருள் செய்ய வேண்டும் என்று வேண்டினாள். மஞ்சுகோஷா! கோபத்தால் மதி இழந்தேன். உன்னைச் சபித்து தவத்தில் எஞ்சியிருப்பதையும் இழந்தேன்.

மஞ்சுகோஷா! “சித்திரை மாதத்து கிருஷ்ண பக்ஷ ஏகாதசியில் உபவாசமிருந்து திருமாலை வழிபட உனக்கு சாபவிமோசனமும், மங்கலங்களும் உண்டாகும்” என்றார். அவ்வாறே அவள் அநுட்டித்து சாபவிமோசனம் அடைந்தாள். மேலும் எல்லா நலன்களும் பெற்று இந்திரலோகம் அடைந்தாள். மேதாவியும் தன் தந்தை ச்யவன முனிவரிடம் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி என் பாபவிமோசனத்திற்கு வழிகூற வேண்டும் என்று வினவினான். அவரும் பாபமோசினி ஏகாதசி விரதம் இருந்து பாபத்தைப் போக்கிக் கொள்ள கூறினார். அவனும் பாபம் விடுபட்டவனாக மீண்டும் சந்தோஷத்துடன் தவச்சாலையை அடைந்தான். தர்ம நந்தனா! நீயும் இந்த விரதம் இருந்து பலன் பெறுவாயாக என்று கண்ணன் கூறினான்.

*விரதம் தொடரும்....*

| | | |
|---|---|---|
| 20-03-2024 | புதன் | ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி |
| 21-03-2024 | வியாழன் | ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி |
| 22-03-2024 | வெள்ளி | திருமலையப்ப ஸ்வாமி |
| 23-03-2024 | சனி | திருமலையப்ப ஸ்வாமி |
| 24-03-2024 | ஞாயிறு | திருமலையப்ப ஸ்வாமி |





# மார்ச் 2024

# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

தொழில் துறையில் நல்ல விருத்தியும், முன்னேற்றமும் உண்டு. புதிய முயற்சிகள் செய்யலாம். நல்ல தனவரவும், பணப்புழக்கமும் உண்டு. குழந்தைகள் கல்விக்காக செலவு உண்டாகும். திருமண வாய்ப்புகள் கூடும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஸ்வாமி தரிசனம் கிட்டும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். இல்லத்தரசிகள் நினைத்ததைச் சாதிக்கும் மாதமிது.

### ரிஷபம்

தொழில் துறையில் அலைச்சல் மிகும். குழந்தைகள் ஆரோக்யக் குறைபாடுகள் நீங்கும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் கிட்டும். கணவன்–மனைவி பிரச்சனைகள் தீரும். புதிய முயற்சியால் தொழிலில் வாய்ப்புகள் கிட்டும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். தாய்–தந்தையர் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்யக் குறைபாடுகள் நீங்கும். முயற்சி வெற்றியடையும் மாதமிது.

### மிதுனம்

வெளிநாடு செல்லும் யோகம், திருமண பாக்கியம் உண்டு. கருவுற்ற பெண்களுக்கு நல்ல யோகமான நேரத்தில் குழந்தை பிறக்கும். தாய்–தந்தையர் கருத்து வேற்றுமைகள் உருவாகி பின் சரியாகும். தொழில் துறையில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு. மனைவியின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். குழந்தைகள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### கடகம்

அஷ்டம சனியால் தொழில் முயற்சியில் தடை ஏற்பட்டுச் சரியாகும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் விரைவில் உண்டு. மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். முடிந்தவரை இம்மாதம் கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். பெற்றோர்களால் தனலாபம், மனஅமைதி உண்டு. மாணவர்களுக்கு முயற்சி திருவினையாக்கும் மாதமிது.

### சிம்மம்

அதிகமான திருஷ்டியால் தொழிலில் சிறு தொய்வு உண்டு. மாதத்தின் பிற்பகுதியில் அலைச்சல் உண்டாகும். தெய்வீக யாத்திரை, பூர்வீகச் சொத்துக்கள் கடும் முயற்சியால் கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவி கிட்டும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். கணவன்–மனைவி பிரச்சனை தீரும். சுகமான மாதமிது.

### கன்னி

ஆரோக்யம் மற்றும் பணவிஷயத்தில் அக்கறை தேவை. மற்றவர்களுக்கு ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். மனைவி, குழந்தைகள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறை எதிரிகளை வெல்ல உழைக்க வேண்டும். வெளி உணவுகளை தவிர்க்கவும். பேச்சில் நிதானம் தேவை. மாணவர்கள் நல்மதிப்பெண் பெற கடும் முயற்சி தேவை. அக்கறையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

### துலாம்

எதிர்பார்த்த தனலாபம் கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலில் அலைச்சல் ஏற்பட்டு தூக்கம் குறைந்தாலும் வெற்றி கிட்டும். பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். நண்பர்கள், உறவினர்கள் உதவுவர். பதவி உயர்வு கிட்டும். மனைவி–குழந்தைகளால் தனலாபம் கிடைக்கும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். பலவிதத்திலும் வெற்றி தரும் மாதமிது.

### விருச்சிகம்

கொடுக்கல்–வாங்கலில் மிக கவனம் தேவை. ஜாமீன் போடுவது, கடன் கொடுப்பது வேண்டாம். குழந்தைகள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. பூர்வீகச் சொத்து குறித்துப் பேசாமல் இருப்பது நன்று. நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு சரியாகும். தாய் ஆரோக்யத்தில் கவனம் தேவை. மொத்தத்தில் தெய்வ வழிபாட்டின் மூலம் முன்னேறும் மாதமிது.

### தனசு

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். தொழில் வளர்ச்சி நன்றாக இருக்கும். தாராள பணப்புழக்கம் உண்டு. வீடு, மனை, வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. குழந்தை பாக்கியம் கிட்டும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். சகல துறைகளிலும் வெற்றி தரும் மாதமிது.

### மகரம்

வக்ர சனியின் காரணமாகத் தொழில் துறையில் மந்த நிலை ஏற்பட்டாலும் வெற்றி நிச்சயம். குழந்தை ஆரோக்யத்தில் குறைபாடுகள் நீங்கும். ஒவ்வாமை ஆரோக்ய குறைபாடு இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவுவர். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழில் துறையில் முயற்சி திருவினையாக்கும் மாதமிது.

### கும்பம்

வேலைப்பளுவினால் அலைச்சல் அதிகரிக்கும். தொழில் துறையில் புதிய வாய்ப்புகள் கிட்டும். இரவு நேரப் பயணம் வேண்டாம். கணவன்–மனைவி பிரச்சனை நீங்கும். குடும்ப வாக்குவாதங்களைத் தவிர்க்கலாம். இளைய மற்றும் மூத்த சகோதரர்களுக்கு நன்மை உண்டு. தைரியமாகவும், பிடிவாதமாகவும் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர். நன்மைகள் தரும் மாதமிது.

### மீனம்

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தெய்வ தரிசனம் கிட்டும். தொழில் துறையில் எதிர்பார்த்த வெற்றி, தனலாபம் உண்டு. மனைவியின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. குழந்தைகளால் பெருமை உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். எதிர்பார்த்த நல்ல நன்மைகள் உண்டு. இல்லத்தரசிகளுக்கு எதிர்பார்த்த நல்ல நிகழ்ச்சிகள் நிகழும். உடல் ஆரோக்யம் சீராகும். யோகமான மாதமிது.



நீதிக்கதை

# தற்புகழ்ச்சி

- செல்வி இரா. அமிர்தவர்ஷினி,
வாணரப்பேட்டை, புதுச்சேரி,
9500264265

குருக்ஷேத்திரத்தில், பாண்டவர்கட்கும், கௌரவர்கட்கும் கடும் போர் நடந்து கொண்டிருந்தது. தருமர், பதினேழாவது நாள் மாலை, பாசறை சென்று பொறுக்க முடியாத வேதனையுடன் படுக்கையில் சாய்ந்து விட்டார். அண்ணனைக் காண அர்ச்சுனன் கண்ணனுடன் பாசறை சென்றான். தம்பி! தனஞ்சயா! கர்ணன் மாண்டானா? அவனை வென்ற உன் வீரமே வீரம்?" என்றார் தருமர்.

"அண்ணா இன்னும் கர்ணன் மாளவில்லை. நான் தங்களைக் காண வந்தேன்" என்றான் அர்ச்சுனன். "அர்ச்சுனா கர்ணனை நானே கொல்லுவேன் என்று பல காலமாக வாய்ப்பறை அறைந்தாய். பகைவனைப் போர்க்களத்திலே வைத்து விட்டு உனக்குப் பாசறையிலே என்ன வேலை? கர்ணனைக் கொல்லாத உனக்கு இந்தக் காண்டீபம் எதற்கு?" என்றார் தருமர்.

அர்ச்சுனன், தன் வில்லைப் பழிப்பவர் தலையை வெட்டித் தள்ளுவதாகச் சபதம் பூண்டவன். சத்தியத்தை உயிரினும் விழுமிய தனஞ்சயன் உடைவாளை தருமருடைய தலையைத் தள்ளுவதற்கு ஓங்கினான்.

## தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி திருக்கோயில்

ராய துர்க்கத்தில் வறட்சி நிலவிய போது பிரதிமிட்ட பாலகூயி என்ற குட்டையின் அருகில் ராமநாயன் என்ற பால்காரனின் கனவில் தோன்றி, தனக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்று ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி கேட்டு, ஆலயத்தை அமைத்துக் கொண்டார் என்று கூறுவர். வாயல்பாடுவிலிருந்து (வால்மீகிபுரம்) குர்ரம் கொண்டாவிற்குச் செல்லும் வழியில் சுமார் 5 கி.மீ. தூரத்தில் "தரிகொண்டா" உள்ளது. இக்கிராமத்தில் வெங்கமாம்பா பிறந்து அவ்வூர் பெயரையே வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். மூன்றடுக்கு ராஜகோபுரத்தோடு உயரமான பிரகாரங்களோடு உள்ள ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயத்தில் ஒன்பது நாட்கள் பிரம்மோத் ஸவம் வைபவமாக நடைபெறும். இந்த ஆலயத்தின் பலிபீடத்தின் முன் நின்று யாராவது சத்தியம் செய்தால் அதை நீதிமன்றத்தில் கூட அனைவரும் ஏற்க வேண்டியதே. அத்தகைய மகிமை உடைய சத்தியத் திற்கு பெயர் பெற்ற ஆலயமே இந்த ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயம்.



♦ திருமலையில் தண்ணீரை வீணாக்காதீர்கள். தேவையில்லாமல் குழாயைத் திருப்பி விட்டுச் செல்லாதீர்கள்.
♦ திருமலையில் மின்சாரத்தை வீணாக்காதீர்கள்.
♦ வெளியே செல்லும் போது மின்விசிறிகள், விளக்குகள், செல்போன் சார்ஜிங் ஆகிய வற்றை நிறுத்தி விட்டுச் செல்லவும்.
♦ திருமலையில் அன்னப்பிரசாதத்தை வீணாக் காதீர். வேண்டிய அளவிற்கே வாங்கிக் கொள்ள வும்.

கண்ணபிரான், “அர்ச்சுனா! தந்தையிலும் சாலச் சிறந்த தமையனை வெட்டத் துணிந்தனையே, நில், நில்” என்றார். “கண்ணா நான் என் வில்லைப் பழித்தவரைக் கொல்வதாகச் சபதம் செய்துள்ளேன். இவர் என் வில்லைப் பழித்தார். தமையனார் என்று நான் சத்தியத்தை விடக்கூடாது. சத்தியம் தவறியவன் நரகமடைவர் என்றான் அர்ஜுனன். உடனே கண்ணபிரான், “பார்த்தா, தருமர் என்பது அவர் உடம்பல்லவே. அவருடைய உள்ளம் நோவ ஏதாவது வைவாயானால் அவரைக் கொன்றதாக ஆகும். உன் சபதமும் நிறைவேறியதாக முடியும். சத்தியம் தவறிய பாவம் உனக்கு வராது” என்றார்.

“அண்ணா! நீ எந்தப் போருக்கு போனாய்? உனக்கு என்ன ஆற்றல் உண்டு?” என்று இந்த இரண்டே சொற்களைத்தான் அர்ஜுனன் சொன்னான். நீங்கள் என்றும், உங்களுக்கு என்றும் பன்மையிற் கூறாமல், நீ, உனக்கு என்று ஒருமையில் உரைத்தான். இப்படி உரைத்த மறுகணம் அர்ச்சுனன் உடைவாளை எடுத்து தன் கழுத்தில் வைத்தான். தற்கொலை செய்து கொள்ள முயன்றான்.

கண்ணபிரான் “தனஞ்சயா! உன்னை நீயே கொலை செய்து கொள்ள ஏன் துணிந்தனை?” என்று கேட்டார். “வாசுதேவா! என் தமையனார் தருமத்தின் சொரூபம். அவர் எனக்குத் தந்தையினுஞ் சிறந்தவர். அவரை “நீ, உனக்கு” என்று கூறிய இந்தப் புல்லிய நாவுடன் நான் உயிர் வாழ மாட்டேன். பெருமானே என் கையை விடுங்கள். நான் என்னையே கொலை செய்து கொள்ளப் போகின்றேன். கண்ணா! என் இதயம் வெடித்து விடுகின்றாற் போல் இருக்கின்றது” என்றான் அர்ச்சுனன்.

“எவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுகி றானோ, அவன் தற்கொலை செய்து கொண்டவன் ஆகின்றான். தற்புகழ்ச்சி, தற்கொலைக்குச் சமமாகும். ஆகவே, உன்னை நீயே சிறிது புகழ்ந்து கொள்” என்றார் கண்ணபிரான். உடனே, அர்ச்சுனன், “நான் உலகமெல்லாம் வென்றவன்; விஜயன்; பாசுபதாத்திரம் பெற்றவன்” என்று கூறினான். தருமன் திருவடி மீது வீழ்ந்து வணங்கினான். கண்ணீரால் அவருடைய பாதத்தைக் கழுவினான். தருமர் அவனைத் தழுவி ஆறுதல் கூறி ஆசிர்வதித்தார். இதனால் பெரியவர்களை “நீ” என்றும், “உன்” என்றும் ஒருமையில் பேசுவது பிழை என்பதும், தன்னைத் தானே புகழ்வது தற்கொலை போன்றது என்பதும், விளங்குகின்றது அல்லவா!

*“வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க*
*நன்றி பயவா வினை.”*



**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**


**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் திருக்கோயில், திருச்சானூர்...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், அப்பளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி திருக்கோயில், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், நாராயணவனம் ...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமர் திருக்கோயில், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

பல்சுவைப் பகுதி

சித்திரப் பகுதி







1) லக்ஷ்மி ஜெயந்தி
2) மஹா சிவராத்திரி
3) ஹோலி பண்டிகை

மேலே குறிப்பிட்டப் பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்

## வார்த்தைகளைச் சரியாக எழுதி “ஆத்திசூடி” யைப் படிப்போமா!

இணக்கம் இணங்கு அறிந்து, தாய்ப் தந்தை பேண், மறவேல் நன்றி

இணக்கம் அறிந்து இணங்கு, தந்தை தாய்ப் பேண், நன்றி மறவேல்.




அபிஷேகத்திற்கான கலச நீரை சுமந்து வரும் இந்த யானைக்கு மஹாலக்ஷ்மியை வழிபட வழியைக் காட்டிடுங்கள்




ஸ்ரீராம ஜென்ம பூமி, ஸ்ரீவிஸ்வநாதர் ஆலயம், திருவேணி சங்கமம், பிரயாக்ராஜ் அமைந்துள்ள மாநிலம்...

உத்தரப் பிரதேசம்



விநாடி விநா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-20

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. மண்டபத் தலங்களில் ஸ்ரீரங்கம்...............................................................................................
2. திருமலை ஆலய க்ஷேத்திர பாலகர்...................................................................................
3. சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவேன் என்று கூறிய ஆழ்வார்..................................................
4. சூர்ப்பணகையைப் பொல்லாத மூக்குடையவள் என்று கூறிய ஆழ்வார்....................................................
5. திருமலை அடிவாரத்தில் அமைந்துள்ள சிவபெருமான்...................................................................
6. சூர்ப்பணகையின் மூக்கினை அறுத்தவர்..................................................................................
7. திருப்பதியில் வீற்றிருக்கும் இராமபிரான்.................................................................................
8. வைகாசி மாத வளர்பிறை ஏகாதசியின் பெயர்..............................................................................
9. திருவரங்கத்தில் சேர்த்தி உத்ஸவம் நடைபெறும் மாதம், நட்சத்திரம்.................................................
10. திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பட்டமஹிஷியின் திருப்பெயர்........................................................
11. மகளிர் தினம் கொண்டாடப்படும் நாள் ...................................................................................
12. சித்திரை மாத ஏகாதசியின் பெயர்கள் ..................................................................................
13. மங்கையராகப் பிறந்திடவே மாதவம் செய்திட வேண்டுமம்மா என்றவர்....................................................
14. இராமபிரானை வனவாசத்திற்கு அனுப்பியவள்..............................................................................
15. திருமாலின் ஐந்து நிலைகள்..............................................................................................

### போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.03.2024.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

**சக்கரத்தைச் சுற்றுங்கள்! விடைகளை அதே வண்ணக்கட்டத்தில் எழுதுங்கள்!!**



அஷ்ட லக்ஷ்மிகளில் முதலில் பூஜையை ஏற்பவள்

யானைகள் சூழ வீற்றிருக்கும் "ஸ்ரீ"

கல்விச் செல்வத்தை அள்ளி அளிக்கும் லக்ஷ்மி

மழலை செல்வத்தை அளிக்கும் லக்ஷ்மி

துணிவை வழங்கும் லக்ஷ்மி

களஞ்சிய செல்வங்களின் லக்ஷ்மி

செல்வத்தை பிரசாதிக்கும் லக்ஷ்மி


வெற்றியை நமக்கு அளிக்கும் லக்ஷ்மி



## விடைகள்

1) ஆதிலக்ஷ்மி, 2) கஜலக்ஷ்மி, 3) வித்யா லக்ஷ்மி, 4) சந்தான லக்ஷ்மி,
5) வீர லக்ஷ்மி, 6) தான்ய லக்ஷ்மி, 7) தன லக்ஷ்மி, 8) விஜய லக்ஷ்மி.

**கீழே காணப்படும் கரங்களில் உள்ள பொருட்களில் அந்த பெண்மணியின் கரத்திற்கு எது சரியாக பொருந்தும்? அப்பொருள் எந்தப் பாதையில் சென்றால் மேலே உள்ள பெண்ணிடம் சென்று அடையும்.**




**விடை**

தாமரை மலர், வழி - ஆ

## காலம் கண் போன்றது!



வாழ்க்கை நமக்குக் கொடுத்த மாபெரும் முதலீடு

*நேரம் மட்டுமே...*


**பயன்படுத்துவதும் வீணடிப்பதும் அவரவர் கையில் தான் உள்ளது!**

*மழலைச் செல்வங்களே! நேரத்தை வீணடிக்காமல் பயனுள்ளதாக மாற்றிக்கொள்ளுங்கள்!*

# கர்வம் மேன்மை தராது

சித்திரக் கதை

கதை மூலம் :திரு.ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் :திரு. கே. துவாரகநாத்




மறுநாள் குபேரன் கணபதிக்கு விருந்து வைக்க ஏற்பாடு செய்தான். விதவிதமான உணவு வகைகளை தயார் செய்து கணபதி உட்கொள்ள பரிமாறினான். கணபதியும் குபேரன் பரிமாறிய உணவுகளை உட்கொண்டபடியே...
விரைவாகப் பரிமாறுங்கள்
அதிகமாக உள்ளதே... தின்று கொண்டே உள்ளீரே!
கணபதி உணவு உண்பதை நிறுத்துங்கள். வயிறு வெடித்து விடப் போகிறது.
குபேரா! அதற்காகத்தான் பாம்பினை வயிற்றைச் சுற்றிக் கட்டியுள்ளேன்.
ஆயிரம் நபர் உண்ணும் உணவினை கணபதி மட்டுமே உட்கொண்டார். குபேரன் அதனைக் கண்டபடியே...
கணபதி! பசி தீர்ந்ததா?
இல்லை! உணவு பரிமாறுங்கள்.
குபேரன் தன் கர்வம் நீங்கி, பரிமாறுவதை நிறுத்திவிட்டு...
பரமேஸ்வரா! உலகத்திற்கு அன்னமிடும் உமக்கு நான் என்ன தர முடியும்?
குபேரனின் கர்வம் நீங்க, கணபதியின் பசியும் தீர்ந்தது. பரமேஸ்வரன் குபேரனுக்கு அருள் புரிந்தார்.
ஸ்ரீரஸ்து! சுபமஸ்து!!
கர்வம் இன்றி இருத்தலே நமக்கு நற்பேரை அளிக்கும்.
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ______________________
(பெரிய எழுத்துக்களில்) ______________________
______________________
______________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

**24 மணி நேரமும்**

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

26-01-2024 அன்று திருப்பதியில் அமைந்துள்ள தி.தி.தே. நிர்வாகக் கட்டட வளாக மைதானத்தில் நடைபெற்ற இந்திய குடியரசு தின விழா. தேசியக் கொடியை ஏற்றி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐடிஇஎஸ் அவர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள், இணைச் செயலாட்சித்தலைவர் திரு. வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், அன்றைய இணைச் செயலாட்சித் தலைவர் (எச்&இ) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்













SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-02-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

